# தொழிலாளர் பாதை

www.padippakam.com


. இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

இலங்கையில் வெளியாகும் ஒரே சோசலிஸ்ட் தமிழ் பத்திரிகை

மாதம் இரு இதழ் 470 | 1996 மே 31 | ரூபா 5.00


## உள்ளே


- வர்க்கப் போராட்டம் வெடிக்கையில் அரசாங்கம் யுத்தத்தை ஆரம்பிக்கின்றது 2
- தடைகளை மீறி புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மே தின ஊர்வலம் 3
- தோட்டத் தொழிலாளர் வேலைநிறுத்தம்: புரட்சிக் கம்யூனிஸ்ட்கழகம் பலம்வாய்ந்த தலையீடு 6
- இந்தியத் தேர்தலில் ட்றொட்ஸ்கிஸ்டுகள் 7
- வடக்கில் இராணுவ ஆட்சிக்காக திவயின பிரச்சாரம் — 8


# இந்திய தேர்தல் முடிவுகள்: இந்தியத் துணைக்கண்டத்தை பிடித்துக் கொண்டுள்ள அரசியல் நெருக்கடியை காட்டுகின்றது

இந்தியாவில் சமீபத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தல் முடிவுகள் இந்திய ஆளும் வர்க்கத்தையும் முழு இந்தியத் துணைக் கண்டத்தையும் பற்றிப் பிடித்துக் கொண்டு வளர்ச்சி பெறும் பிரமாண்டமான அரசியல் நெருக்கடியைக் காட்டுகின்றது. இந்த அரசியல் நெருக்கடி இந்தியத் துணைக் கண்டத்தில் சோசலிச குடியரசு ஒன்றியத்துக்காகப் போராடும் அவசியத்தை கோடானுகோடி தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் முன்னிலையில் தோற்றுவித்துள்ளது.

வெளியான சமீபத்தைய பொதுத் தேர்தல் முடிவுகளின்படி கடந்த ஐந்து ஆண்டுகளாக ஆட்சி செலுத்திய காங்கிரஸ் கட்சி படுமோசமான தோல்வியைத் தழுவிக் கொண்டுள்ளது. காங்கிரஸ் கட்சி 136 இடங்களையே கைப்பற்றியுள்ளது. முன்னர் அதற்கு லோக் சபாவில் 260 இடங்கள் இருந்தன.

படு பிற்போக்கு இனவாதக் கட்சியான பாரதீய ஜனதா கட்சியும் பாசிச சிவசேனாவும் கூட்டாக 195 இடங்களைக் கைப்பற்றிக் கொண்டுள்ளன. இது லோக் சபாவின் முழு ஆசன எண்ணிக்கையான 545ல் மூன்றில் ஒன்றுக்கு சற்று அதிகமானதாகும். பீ.ஜே.பீ.-சிவசேனா கூட்டு ஜனாதிபதி சங்கர் தயாள் ஷர்மாவின் அழைப்பின் பேரில் லோக் சபாவில் அதிக எண்ண்க்கை கொண்ட கட்சியாக அரசாங்கத்தை அமைத்துக் கொண்டுள்ள போதிலும் அரசாங்கத்தில் இருந்து கொள்ள இன்னும் 76 எம்.பீ.களின்

(9ம் பக்கம் பார்க்க)



பொதுஜன முன்னணி அரசாங்க மே தின ஊர்வலத் தடையையும் மீறி புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மே 1ம் திகதி கொட்டாஞ்சேனை நியூஹாம் சதுக்கத்தில் இருந்து இரத்தினம் மைதானத்துக்கு முழு உத்வேகத்துடன் வெற்றிகரமாக நடாத்திய ஊர்வலத்தில் ஒரு கட்டம்

# ஐரோப்பாவில் விடுதலைப் புலிகளின் புதிய குண்டர் தாக்குதல்கள்

வலதுசாரி தேசியவாத தமிழீழ விடுதலைப் புலிகளால் திரட்டப்பட்ட ஒரு குண்டர் கோஷ்டி மே தினத்தன்று ஜேர்மன் தொழிற் சங்கங்களால் ஒழுங்கு செய்யப்பட்ட டசில்டோவ் மேதின ஊர்வலத்தில் ஜேர்மன், இலங்கை ட்றொட்ஸ்கிஸ்டுகள் மீது ஒரு காட்டுமிராண்டித்தனமானதும் ஆத்துரமூட்டப்படாததுமான தாக்குதலை நடாத்தியது. இரண்டு மாதத்துக்கும் குறைவான காலப் பகுதிக்குள் ஐரோப்பாவில் உள்ள நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் ஆதரவாளர்களுக்கு எதிராக ஐரோப்பாவில் விடுதலைப் புலிகள் நடாத்திய இரண்டாவது தாக்குதல் இதுவாகும். மார்ச் 12ம் திகதி பாரிசில் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைப் பகுதியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் வெளிநாட்டுக் கிளையின் அங்கத்தவர்களுக்கு எதிராக இதே பாணியிலான தாக்குதல் நடாத்தப்பட்டது.

பாரிஸ் தாக்குதல் இடம்பெற்றதிலிருந்து நா.அ.அ.கு.வும் அதன் ஐரோப்பியப் பகுதிகளும் விடுதலைப் புலிகளின் ஆயுதக் காடைத்தனங்களை அம்பலப்படுத்தும் பிரச்சார இயக்கத்தில் ஈடுபட்டன. தொழிலாளர் வர்க்கத்தின் பேரிலும் ஜனநாயக உரிமைகளை பேணுவதன் பேரிலும் பேசிக் கொள்ளும் சகல இயக்கங்களையும் இந்த பிற்போக்கு வன்முறையைக் கண்டனம் செய்யும்படியும் எதிர்க்கும்படியும் அவை கேட்டுக் கொண்டுள்ளன.

இந்த டசில்டோவ் ஊர்வலத்தில் நா.அ.அ.கு.வின் ஜேர்மன் பகுதியான பண்ட் சோசலிஸ்ட் ஆபைட்டரினதும் (BSA) புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் வெளிநாட்டுக் கிளையினதும் அங்கத்தவர்கள் மார்ச் 12ம் திகதிய தாக்குதலை கண்டிக்கும் பிரசுரங்களை விநியோகித்ததோடு விடுதலைப் புலிகளின் காடைத்தனங்களை கண்டனம் செய்யும் பத்திரங்களில் கையொப்பமும் சேகரித்தனர். இதைக் கண்ட விடுதலைப் புலிகள் தலைமை ஜேர்மன், இலங்கை ட்றொட்ஸ்கிஸ்டுகளை தாக்க சுமார் 50 குண்டர்களை திரட்டினர். அவர்கள் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் தமிழ் தோழர்களுக்கு எதிராக பெரும் தாக்குதலை நடாத்தினர்.

அச்சுத் தொழிலாளர் சங்கமான ஐ.ஜீ.மீடியனின் அங்கத்தவர்கள் பீ.எஸ்.ஏ.குண்டர்களை பின்வாங்கச் செய்வதில் உதவினர். மே தினக் கூட்டம் முடிவடைந்த பின்னர் அவர்கள் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் தமிழ் அங்கத்தவர்களைப் பாதுகாத்தனர். இந்த இறுதித் தாக்குதல் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் திட்டவட்டமான அரசியல், வர்க்கக் காரணங்களுக்காக இலக்காகிக் கொண்டுள்ளதைச் சுட்டிக் காட்டுகின்றது. யாழ்ப்பாணம் இலங்கை இராணுவத்திடம் வீழ்ச்சி கண்டதைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் இலங்கையில் குழம்பிப் போயுள்ளது. ஒரு பேச்சுவார்த்தை மூலமான தீர்வுக்குப் பதிலாக ஒரு இராணுவ வெற்றியை ஈட்டிக் கொள்ளும் இலங்கை அரசாங்கத்தின் திடசங்கற்பம் விடுதலைப் புலிகளின் நெருக்கடியை உக்கிரமாக்கியுள்ளது. தமிழ் மக்கள் மீதான விடுதலைப் புலிகளின் கட்டுப்பாடு ஈடாட்டம் கண்டுபோயுள்ளது. சமீப நாட்களாக இலங்கை இராணுவத்தின் ஆக்கிரமிப்பிற்குட்பட்ட நகரங்களில் இருந்து விலகி இருக்குமாறு விடுதலைப் புலிகள் விடுத்த கட்டளைகளுக்கு இடையேயும் தமிழ் அகதிகள் யாழ்ப்பாணத்துக்கு திரும்பி வருகின்றனர்.

தமிழ் தேசியவாதிகளின் அவஸ்தைநிலை அவர்களை தொழிலாளர் வர்க்கத்தின் மீது தொடர்ந்து பிற்போக்கு தாக்குதலை நடாத்தும்படி தள்ளியுள்ளது. கடந்த ஜனவரி 31ம் திகதி விடுதலைப் புலிகள் இலங்கை மத்திய வங்கி மீது பயங்கரவாதத் தாக்குதலை நடாத்தியது. இதனால் 90 பேர் கொல்லப்பட்டதோடு மேலும் 1200 பேர் காயமடைந்தனர். இதற்கு பலிகடா ஆனவர்களுள் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் அங்கத்தவர்களும் ஆதரவாளர்களும் அடங்குவர். புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மத்திய வங்கி ஊழியர் சங்க தலைமையில் இருந்து வந்துள்ளதோடு வங்கி ஊழியர்களை பல்லாண்டுகளாக இலங்கை அரசாங்கத்தின் இனவாத யுத்தத்துக்கு எதிராக அணிதிரட்டப் போராடி வந்துள்ளது. விடுதலைப் புலிகள் குண்டு வீச்சு நடாத்த மத்திய வங்கி கட்டிடத்தை தெரிவு செய்த போது இதை நன்கு அறிந்திருந்தது.

விடுதலைப் புலிகள தலைமை பு.க.க.வின் செல்வாக்கின் அதிகரிப்பையிட்டு அச்சம் கொண்டுள்ளது. அது இளங்கை ஆட்சியாளர்களுக்கு எதிரான அதனது கொள்கைப் பிடிப்பானதும் நீண்டதுமான போராட்டத்தின் மூலம் தமிழ் தொழிலாளர் வர்க்கத்தின் உள்ளே ஏதேனும் நன்மதிப்பைப் பெற்றுள்ள ஒரே கட்சி இதுவே.

தமிழ் மக்களிடையே அதன் பத்திரிகையான தொழிலாளர் பாதையின் விநியோகத்தின் மூலம் அது உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தனது அரசியல் நிலைப்பாட்டை பரந்த அளவில் தெரியப்படுத்திக் கொண்டுள்ளது.

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு விடுதலைப் புலிகளின் கொலைகார உபாயங்களினால் அஞ்சிப் பணிந்து போகாது. அது ஐரோப்பா பூராவும் - அத்தோடு அனைத்துலகிலும் ஜனநாயக உரிமைகளைப் பேணவும் இந்த தாக்குதல்களில் பொதிந்து போயுள்ள வர்க்கப் பிரச்சினைகளை முழுத் தொழிலாளர் வர்க்கத்தின் முன்னால் அம்பலப் படுத்தவும் தொடர்ந்து பிரச்சாரம் செய்யும்.

**வடக்கு-கிழக்கில் இருந்து ஸ்ரீலங்கா இராணுவத்தை வெளியேற்று!**

படிப்பகம்

www.padippakam.com

# வர்க்கப் போராட்டம் வெடிக்கையில் அரசாங்கம் யுத்தத்தை ஆரம்பிக்கின்றது

பொதுஜன முன்னணி அரசாங்கம் ஏப்பிரல் 19ம் திகதி ரிவிரச-2 என்ற பேரில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இனவாத யுத்தத்தின் புதிய கட்டத்தை ஆரம்பித்தது. அரசாங்கத்துக்கும் இராணுவத்துக்கும் அவசியமான விதத்தில் யுத்த நிலைமையை மூடிமறைக்கும் பொருட்டு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க அன்றே யுத்த செய்திகளுக்குத் தணிக்கை விதித்தார்.

கடற்படை, விமானப்படைகளின் உதவியோடு பல்லாயிரக் கணக்கான படையினர் யுத்த டாங்கிகள் பீரங்கிகள் உள்ளடங்கலான நவீன யுத்த தளபாடங்கள் சகிதம் வடமராட்சி-தென்மராட்சி பகுதிகளில் யுத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

வடமராட்சி, முல்லைத்தீவு பகுதிகளில் பல விடுதலைப் புலிகளின் முகாம்கள் விமானத் தாக்குதல்களால் நாசமாக்கப்பட்டதாகவும் இன்னும் பல மறைவிடங்களும் கெரில்லா பயிற்சி முகாம்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அரசாங்கத்தினதும் இராணுவத்தினதும் செய்தி அறிக்கைகள் குறிப்பிட்டன. அரசாங்கப் படைகள் தென்மராட்சியில் கொடிகாமம், கச்சாய் நகரங்களை கைப்பற்றிக் கொண்டுள்ளதாகவும் வடமராட்சியில் பெரும்பகுதி இராணுவத்தின் வசம் வந்துள்ளதாகவும் அந்த அறிக்கைகள் குறிப்பிட்டன. விடுதலைப் புலிகளும் பொதுமக்களும் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கும் தீவின் பெருநிலப்பரப்புக்கும் இடையே பிரதான போக்குவரத்து மார்க்கமாகப் பாவித்து வந்த கிளாலி கடலேரிப் பகுதியை கடந்த ஏப்பிரல் 26ம் திகதி கைப்பற்றிக் கொண்ட இராணுவம் படகுகளைத் தகர்த்து எறிந்துள்ளது. இன்று பொதுமக்கள் யாழ்ப்பாணக் குடாநாடு- தீவின் பெருநிலப்பரப்பு என்ற இரண்டில் இருந்தும் முழுமனே பிரித்துச் "சீல்" வைக்கப்பட்டுள்ளனர்.

ரிவிரச-1 இராணுவ நடவடிக்கையின் போது வலிகாமத்தில் இருந்து வெளியேறிய சுமார் 5 இலட்சம் மக்களில் 2 இலட்சம் மக்கள் தற்போது இராணுவம் கைப்பற்றிக் கொண்டுள்ள பகுதிகளுக்குத் திரும்பிக் கொண்டுள்ளனர். கர்ப்பிணிப் பெண்களும் கைக்குழந்தைகளும் குழந்தைகளும் நோயாளிகளும் வயோதிபர்களும் நடந்தும் மாட்டு வண்டில்களிலும் சைக்கிள்களிலும் வீதி நெடுகிலும் கியூவில் பயணம் செய்யும் காட்சியை அரசாங்க ரூபவாஹினிக் காட்சிகள் காட்டுகின்றன. இவை இனவாத யுத்தம் தமிழ் ஒடுக்கப்படும் மக்கள் மீது கட்டியடித்துள்ள பிரமாண்டமான துயரங்களைச் சித்தரித்துக் காட்டிக் கொண்டுள்ளன. இம்மக்கள் தமது வீடு வாசல்களுக்குச் செல்வதற்கு முன்னர் பொலிசும்-இராணுவமும் இவர்களைப் பற்றிய சகல விபரங்களையும் சேகரிப்பதிலும் பொலிஸ்-இராணுவ நிலையங்களை அமைப்பதிலும் ஈடுபட்டுள்ளது. இவர்களுக்கு விசேட அடையாள அட்டைகள் விநியோகமும் இடம்பெற்று வருகின்றது. மக்களை இந்த விதத்தில் அனுப்பும் பொருட்டு மூன்று இடம்பெயர்ந்து முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதாக பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த ஏப்பிரல் 25ம் திகதிய பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

## குண்டுவீச்சு

விமானப் படைக் குண்டு வீச்சுக்கள் சரியான இலக்குகள் மீது நடாத்தப்பட்டதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தமக்கு அறிவித்துள்ளதாகவும் அவர் அந்த பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார். கிளாலிக் கடலேரி ஊடாகப் பயணம் செய்த ஐந்து பொது மக்கள் இறந்ததோடு மேலும் 56 பேர் காயமடைந்ததாக செஞ்சிலுவைச் சங்கம் தமக்கு அறிவித்துள்ளதாகவும் அவர் அங்கு குறிப்பிட்டார். ரிவிரச-2 இராணுவ நடவடிக்கையின் போது ஏப்பிரல் 25ம் திகதி இரண்டு இராணுவத்தினர் இறந்ததோடு 13 பேர் காயமடைந்ததாகவும் 200 க்கும் அதிகமான விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டதாகவும் பாதுகாப்பு வட்டாரங்களின் செய்தி அறிக்கைகள் குறிப்பிட்டன. பொதுஜனங்களுக்கும் அவர்களின் சொத்துக்களுக்கும் ஏற்பட்டுள்ள இழப்புக்களையிட்டு உண்மை நிலையை தொழிலாளர் - ஒடுக்கப்படும் மக்கள் கண்டறிவதற்கான மார்க்கங்கள் இழுத்து மூடப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளுக்கும் பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கும் இடையேயான சமாதானப் பேச்சுவார்த்தை எனப்படுவது பொறிந்து கொட்டி, 1995 ஏப்பிரல் 25ம் திகதி மீண்டும் இனவாத யுத்தம் வெடித்த ஒரு வருட காலமும் 13 வருடகால யுத்தத்தின் கடைகெட்ட இரத்தம் தோய்ந்த வருடமாகப் பதிவாகியுள்ளது.

யுத்தத்தின் வெற்றி பற்றி ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் பொதுஜன முன்னணியும் முதலாளித்துவ வெகுஜனத் தொடர்பு சாதனங்களும் இனவாதிகளும் போடும் கூச்சல்களினால் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் வழி தடுமாறிவிடக் கூடாது. விடுதலைப் புலிகளின் பிரிவினைவாத வங்குரோத்து வேலைத் திட்டத்தினால் வடக்கு-கிழக்கு ஒடுக்கப்படும் தமிழ் மக்கள் முட்டுச் சுவருக்குள் தள்ளப்பட்டு உள்ள விதத்தையும், இராணுவ வெற்றி கூச்சல்கள் மூலம் நாடு பூராவும் இராணுவ-பொலிஸ் ஆட்சிக்கான நிலைமைகளைச் சிருஷ்டிக்கும் விதத்தையும் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். வளர்ச்சி கண்டு வரும் ஆபத்தான ஆட்சி நிலைமைக்கு முகம் கொடுக்கும் பொருட்டு அவர்கள் தொழிலாளர் வர்க்கத்தின் சுயாதீன வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அணிதிரள வேண்டும்.

ஒரே கல்லில் இரண்டு குருவிகளை வீழ்த்தும் பொருட்டு அரசாங்கம் ரிவிரச-2 இராணுவ நடவடிக்கையை தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் இறங்குவதற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் ஆரம்பித்தது. இது யுத்த வெறியின் பழுவைத் தோட்டத் தொழிலாளர்கள் மீது கட்டியடிப்பதை இலக்காகக் கொண்டிருந்தது. இது தோல்வியில் முடிந்தது. காரணம்? நான்கு இலட்சம தமிழ் பேசும் தோட்டத் தொழிலாளர்கள் மட்டுமன்றி இரண்டு இலட்சம் சிங்களம் பேசும் தோட்டத் தொழிலாளர்களும் வேலைநிறுத்தத்தில் குதித்ததேயாகும். யுத்தத்தினால் நாட்டின் பாதுகாப்பு நிலைமை கெட்டுப் போயுள்ளது எனக் கூறிக்கொண்டு பொதுஜன முன்னணி அரசாங்கம் முழு நாட்டையும் அவசரகால நிலைமைக்குக் கீழ்ப்படுத்தி தோட்டத் தொழிலாளர் வேலை நிறுத்தத்துக்கு எதிராக ஒடுக்கு முறையின் குண்டாந்தடியை நீட்டியது. ஆனால் பிரமாண்டமான தொழிலாளர் வர்க்கமும் இதில் கலந்துகொண்ட நிலைமையில் நினைத்த விதத்தில் ஒடுக்குமுறையை முன்னெடுக்க அரசாங்கத்தினால் முடியாது போய்விட்டது. எனினும் அதிகாரத்துவங்களால் வேலைநிறுத்தம் ஒரு முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட மூன்று நாட்களுக்குள் நாட்டின் பாதுகாப்பு நிலைமையை பற்றிய மோசடியின் கீழ் மேதின ஊர்வலம் தடை செய்யப்பட்டது.

## நிச இலக்கு

இனவாத யுத்தத்தினதும் அதன் ஒரு பாகமாக ரிவிரச இராணுவ நடவடிக்கைகளினதும் நிச இலக்கினை தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் இந்த அபிவிருத்திகள் மூலம் நன்கு புரிந்து கொண்டாக வேண்டும். தோட்டத் தொழிலாளர் வேலைநிறுத்தம் இலங்கைத் தொழிலாளர் வர்க்கப் போராட்டத்தின் வெடிப்பின் புதிய மட்டத்தைக் காட்டிக் கொண்டுள்ளது. தினமும் தாக்குதல்களுக்கு உள்ளாகி வரும் கிராமப்புற ஏழை மக்களும் மற்றும் ஒடுக்கப்படும் மக்களும் கிளர்ந்து கொண்டுள்ளனர். தனியார்மயம், ரூபா மதிப்பிறக்கம், நலன்புரிச் சேவை வெட்டு உள்ளடங்கலான தாக்குதல்களில் இறங்க அரசாங்கத்துக்கு இந்நிலைமையின் கீழேயே நேரிட்டது. பொதுஜன முன்னணி அரசாங்கம் இனவாத யுத்தத்தை இன்று வடக்கு- கிழக்கு மாகாணங்களைக் கைப்பற்றுவதோடு நின்றுவிடாது இங்ஙனம் கிளர்ந்து வரும் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களை பொலிஸ்-இராணுவ ஒடுக்குமுறை மூலம் நசுக்கித் தள்ளி, ஏகாதிபத்தியவாதிகளின் சுரண்டலுக்கான நிலைமையை சிருஷ்டித்துக் கொடுப்தற்கே உக்கிரமாக்க நேரிட்டுள்ளது. இலங்கையின் நாற்றம்கண்ட முதலாளிகள் 48 ஆண்டுக கால ஆட்சிக் காலத்தின் போது நெருக்கடிக்குள் தள்ளப்பட்ட ஒவ்வொரு வேளையிலும் இனவாதத்தை கிளறிவிட்டு உயிர்பிழைத்தனர். வெளிநாட்டு மூலதனத்துக்கு அப்பட்டமாகத் தொழிலாளர்களைப் பலியிடுவதை ஆரம்பித்த ஜெயவர்தன ஆட்சிக் காலத்தில் இந்த இனவாத இயக்கம் ஒரு யுத்தத்தின் மட்டத்துக்குத் தள்ளப்பட்டது. முதலாளித்துவ விடுதலைப் புலிகளின் பிரிவினைவாதத்தையும் பயங்கரவாதத்தையும் எதிர்க்கும் சாட்டில் தமது பிற்போக்கு எதிர்ப்புரட்சி திட்டங்களை மூடிமறைக்க முதலாளிகளும் அதன் பொதுசன முன்னணி அரசாங்கமும் முயற்சிக்கின்றது.

பொதுஜனமுன்னணி அரசாங்கத்தின் யுத்தத்துக்கு அமெரிக்க, ஐரோப்பிய, யப்பானிய ஏகாதிபத்தியவாதிகளின் ஆதரவு கிடைக்கின்றது. பொதுஜன முன்னணி இராணுவ இயக்கத்தின் மூலம் விடுதலைப் புலிகளை சிதறடித்துத் தன்னும் தோற்கடிப்பதின் மூலம் இலங்கையினுள் ஒரு புதிய எதிர்ப்புரட்சி அரசாங்கத்தினை உருவாக்குவதும் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கட் போராட்டத்தை தவிடுபொடியாக்குவதும் தமக்கு வாய்ப்பான சுரண்டல் நிலைமைகளை சிருஷ்டிக்க அவசியம் என ஏகாதிபத்தியவாதிகள் எண்ணுகின்றார்கள்.

தம்மை விடுவிக்குமாறு யாழ்ப்பாண மக்கள் எனக்கு அறிவித்தார்கள் என ஏப்பிரல் 25ம் திகதி நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் பேசிய ஜெனரால் அநுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார். இனவாத யுத்தத்தை ஆரம்பித்த ஜயவர்தனா தொடக்கம் அனைத்து முதலாளித்துவ தலைவர்களும் தமிழ் மக்களை விடுதலை செய்யும் பொய்யை எத்தனை தடவை கட்டவிழ்த்துள்ளார்கள்? வடக்கு-கிழக்கு மக்களை விடுதலை செய்யும் கதைகளை முதலாளிகள் கட்டவிழ்ப்பது, தென்மாகாண மக்களை ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் சுரண்டலுக்கு பலியிடுவதன் மூலம் காலனித்துவத்தை திணிக்கும் கொம்பிரதோர்களாக செயற்பட்ட வண்ணமாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட்ட தமிழ் முதலாளித்துவ அமைப்புக்களாகட்டும் பொதுஜன முன்னணி உள்ளடங்கலான சிங்கள முதலாளிகள் ஆகட்டும் தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்குப் பெற்றுத் தரும் விடுதலை எதுவும் கிடையாது. தமது நிர்வாகத்தில் இருந்து விடுபட்ட வடக்கு-கிழக்கு மாகாணங்களை மீண்டும் கைப்பற்றிக் கொள்ளும் முகமாக இராணுவ நடவடிக்கை இடம்பெறுவது இவ்விரண்டு மாகாணங்களையும் ஏகாதிபத்திய சுரண்டலுக்கு விற்றுத் தள்ளும் தனியுரிமையை சிங்கள முதலாளிகள் பெற்றுக் கொள்ளும் இலக்குடனேயேயாகும். வடக்கு- கிழக்கு இராணுவம் தனது நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்ததும் அம்மாகாணங்களை சீர்திருத்தி, புனரமைக்கும் நடவடிக்கைகளுக்கு 'உதவி வழங்கும் குழு'வின் நாடுகளில் இருந்து 5000கோடி ரூபாக்கள் கிடைக்குமென உலக வங்கியின் உப-தலைவர் ரீ. யுகுபி தம்மிடம் கூறியதாக பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஜெனரால் ரத்வத்த 'டெயிலி நியூஸ்' பத்திரிகையிடம் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் கொதிப்புக்கு பெரிதும் இலக்காகிக் கொண்டுள்ளது. இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் வதிவிடங்களுக்குத் திரும்புவது இலங்கை இராணுவத்தின் மேலான விருப்பினாலன்றி விடுதலைப் புலிகளுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாக அமைந்துள்ளது. பருத்தித்துறை உள்ளடங்கலான வடமராட்சிப் பகுதியில் இருந்து இராணுவ ஆக்கிரமிப்புக்கு முன்னதாக வெளியேறும்படி விடுதலைப் புலிகள் விடுத்த பணிப்புக்களையும் மக்கள் கணக்கெடுக்கவில்லை. விடுதலைப் புலிகளது வங்குரோத்தையும் பிற்போக்கையும் நிதர்சனமாக்கும் விதத்தில் அதன் லண்டன் அலுவலக தலைவர்களில் ஒருவரான அன்டன் ராஜா் எனப்படுபவர் அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தையை உருவாக்கும் விதத்தில் ஒரு மூன்றாம் தரப்பினர்- ஏகாதிபத்திய அரசாங்கம்- தலையிட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளார். இனவாத யுத்தத்துக்கு எதிராக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் வழிகாட்டலின் கீழ் அணிதிரட்டல் இடம்பெற்ற இடமான இலங்கை மத்திய வங்கி ஊழியர்களுக்கு எதிராக பயங்கரவாத குண்டுவீச்சினை நடாதத்திய விடுதலைப் புலிகள் இன்று புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துக்கு எதிராக அப்பட்டமான அச்சுறுத்தல்களிலும் ஈடுபட்டுள்ளது. இவை அது ஒரு ஏகாதிபத்தியச் சார்பு அமைப்பாக நாற்றம் கண்டுள்ளதை மேலும் ஊர்ஜிதம் செய்துள்ளது.

முதலாளித்துவ பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் யுத்தம் எமது யுத்தம் அல்ல. எமது தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் யுத்தம் அல்ல. விடுதலைப் புலிகளின் பிரிவினைவாதம் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் அவசியம் அல்ல. தமிழ்-சிங்கள தொழிலாளர்கள் ஒன்றிணைந்து ஏனைய ஒடுக்கப்படும் மக்களை தம்மைச் சூழ ஒன்றிணைப்பதன் மூலம் முதலாளித்துவ அரசாங்கம் முன்னெடுக்கும் யுத்தத்துக்கும் அவசரகாலச் சட்ட சர்வாதிகார ஆட்சிக்கும் எதிராகக் கிளர்ந்து எழ வேண்டும். யுத்தத்தை முடிவுக்கு கொணர்வதும் சமாதானமும் முதலாளித்துவ ஆட்சியின் கீழ் பெற்றுக் கொள்ளக் கூடியனவல்ல. தமிழ் தேசிய இனத்தின் ஜனநாயக உரிமைகளை ஊர்ஜிதம் செய்வதும் யுத்தத்துக்கு முடிவு கட்டுவதும் அனைத்துலகவாத சோசலிச வேலைத் திட்டத்தின் கீழ் முதலாளித்துவ ஆட்சியைத் தூக்கிவீசி, ஈழம்-சிறீலங்கா சோசலிசக் குடியரசு ஒன்றியத்தை கட்டியெழுப்புவதன் மூலம் மட்டுமே சாத்தியமாகும். வடக்கு-கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்றவும் தமிழ் தேசிய இனத்தின் தேசிய ஜனநாயக உரிமைகளை காக்கவும் தனியார்மயம்-நலன்புரி சேவை வெட்டுக்கு எதிராகவும் தொழிலாளர் வர்க்கத்தின் பிரச்சாரத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும். தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகளைக் காக்க அடிப்படை நடவடிக்கைகளை எடுப்பதற்கும் கூட முதலாளித்துவ சொத்துக்களை தொழிலாளர் வர்க்கத்தின் நிர்வாகத்தின் கீழ் தேசியமயமாக்க வேண்டும். முதலாளித்துவ அரசாங்கம் இனவாத யுத்தத்தை நடாத்துவதன் இலக்கு தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் இந்த வேலைத் திட்டத்துக்குப் போராடுவதைத் தடுப்பதற்கே என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

முதலாளித்துவ அரசாங்கத்தின் அலுகோசுகளாகியுள்ள சமசமாஜ கட்சி தலைவர்கள் கடந்த அவசரகாலச் சட்ட விவாதத்தில் கூறியதாவது: வடக்கு-கிழக்கிற்கு அவசரகாலச் சட்டத்தை விதிப்பதற்கு தமது கட்சி ஆதரவு என்றுள்ளனர். இன்று ரிவிரச இராணுவ நடவடிக்கையின் மூலம் வடக்கு விடுதலை செய்யப்பட்டுவிட்டதாக அவர்கள் இராணுவத்துக்குப் பூச்செண்டு வழங்குகின்றார்கள். நவசமசமாஜக் கட்சி ஒரு புறத்தில் வடக்கு-கிழக்கு தமிழ் முதலாளி வர்க்கத்தின் "சுயாட்சிக்காக" பிரச்சாரம் செய்கின்றது. மறுபுறத்தில் அரசாங்கத்துக்கும் ஜே.வீ.பீ. போன்ற பிற்போக்குச் சக்திகளுக்கும் முண்டுகொடுக்கின்றது.

படிப்பகம்

www.padippakam.com

# தடைகளை மீறி புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மே தின ஊர்வலம்

“நாம் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் தடைகளை உடைத்துக் கொண்டு இந்த மே தின ஊர்வலத்தை இரத்தினம் மைதானத்தை நோக்கி வெற்றிகரமாக நடாத்தியதற்கு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மார்க்சிச முன்னோக்கினில் ஆழமாகக் காலூன்றிப் போராடுவதே காரணம்” எனக் கடந்த 1996 மே தினத்தன்று கொட்டாஞ்சேனை இரத்தினம் மைதானத்தில் நடைபெற்ற புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக மே தினக் கூட்டத்தில் பேசிய அதன் பொதுச் செயலாளர் தோழர். விஜே டயஸ் குறிப்பிட்டார். “பொதுசன முன்னணி அரசாங்கத்தின் மே தினத் தடையை நாம் கணக்கெடுக்காது விட்டுவிடவில்லை. நாம் பொதுஜன முன்னணி அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னரே அதனது கடைகெட்ட முதலாளித்துவ தன்மையை தெளிவுபடுத்திக் கொண்டோம். அது சம்பந்தமாக எந்தவிதமான நப்பாசையும் வைத்துக் கொள்ளுவதற்கு எதிராக நாம் தொழிலாளர் வர்க்கத்தை எச்சரித்தோம். அதன்முலம் அன்று பொதுஜன முன்னணி அரசாங்கத்தை ஆட்சியில் அமர்த்த தோள்கொடுத்துவிட்டு - இன்று அந்த அரசாங்கம் தொழிலாளர் வர்க்கத்துக்கு தாக்குதல் நடாத்தும் சமயத்தில் தமது துரோகத்தினை பூசிமெழுகுவதற்கு பல்வேறுபட்ட பின்தங்கியதும் குத்துக்கரணம் கொண்டதுமான சூழ்ச்சிகளில் ஈடுபடும் நவசமசமாஜக் கட்சியின் விக்கிரமபாகு கருணாரத்னாக்கள் போலல்லாது எமக்கு தொழிலாளர் வர்க்கத்துக்கு நிச நிலைமையைப் புகட்டுவதும் அதன் அடிப்படையில் தொழிலாளர் வர்க்கத்தை அணிதிரட்டுவதற்கு அதிகூடிய வாய்ப்பினை ஏற்படுத்திக் கொள்வதும் அவசியம்” என விஜே டயஸ் மேலும் தெளிவுபடுத்தினார்.

இன்று உலகம் பூராவும் உக்கிரமாக்கப்பட்டுவரும் முதலாளித்துவத்தின் தாக்குதலினுள் எதிர்த் தாக்குதலுக்கு கிளர்ந்து கொண்டு உள்ள தொழிலாளர் வர்க்கத்துக்கு சரியான தலைமையை - வழங்க அவசியமான அனைத்துலகவாத தலைமையை மார்க்சிசத்தை அடிப்படையாகக் கொண்ட ஒழுங்குமுறையான போராட்டத்தின் மூலமேமுடிவுயென்றும் அத்தைகய ஒன்றை நவசமசமாஜக் கட்சி போன்ற குட்டி முதலாளித்துவத் தீவிரவாதத்துக்கு எதிரான போராட்டத்தின் மூலமே கட்டியெழுப்ப முடியுமென்றும் விஜே டயஸ் குறிப்பிட்டார்.

இந்த மே தினத்தில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் ஊர்வலம் ஆரம்பிக்க இருந்த கொச்சிக்கடை நியூஹாம் மைதானத்தில் இருந்து இரத்தினம் மைதானம் வரையும் தொடர்ச்சியாக இடம்பெற்ற பொலிஸ் வன் முறைகளையும் ஆத்திரமூட்டல்களையும் தாண்டி 250க்கும் அதிகமான ஊர்வலத்தினர் அதில் பங்கு கொண்டதோடு இரத்தினம் மைதானத்தின் முன்னிலையில் சுமார் 30நிமிடங்கள் பலம் வாய்ந்த மறியலையும் நடாத்தினர். இறுதியாக பிற்பகல் 3.30- 7.00 வரை நடைபெற்ற கூட்டத்தில் 350க்கும் அதிகமானோர் கலந்துகொண்டனர்.

கரையோரப் பகுதியான உடப்புவில் இருந்து மாத்தறை வரையும், கண்டி ,அட்டன், பண்டாரவளை, பதுளை போன்ற மலைநாட்டுப் பகுதியில் இருந்தும் வந்த தொழிலாளர்களும் ஒடுக்கப்படும் மக்களும் இந்த ஊர்வலத்திலும் கூட்டத்திலும் கலந்துகொண்டனர். அரசாங்க ஊழியர்கள் , வங்கி ஊழியர்கள், பக்டரி -தோட்டத் தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் இளைஞர்கள் ,கிராமப்புற ஒடுக்கப்படும் மக்கள், பெண்கள் என்போர் ஊர்வலத்தையும் கூட்டத்தையும் பிரதிநிதித்துவம் செய்தனர்.

உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்! என்ற பதாகையை முன்னணியாகக் கொண்ட புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினதும் இளம் சோசலிஸ்டுகளதும் பதாகைகள் பயணம் செய்தன. அதைத் தொடர்ந்து கட்சியின் முக்கிய வேலைத்திட்ட சுலோக அட்டைகள் தாங்கிய ஊர்வலத்தினர் பயணம் செய்தனர்.

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவைக் கட்டி எழுப்பு!

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தை- சோசலிச சமத்துவக் கட்சியாகக் கட்டியெழுப்பு!

யுத்தத்தை நிறுத்து! தொழிலாளர்களே ஆட்சியைக் கைப்பற்றுங்கள்!

முதலாளித்துவ தேசியவாதம் ஒழிக! தொழிலாளர் வர்க்க அனைத்துலக வாதம் வெல்க!

வடக்கில் இருந்து சிறீலங்கா இராணுவத்தை வெளியேற்று!

ஈழம்-சிறீலங்கா சோசலிசக் குடியரசை கட்டியெழுப்பு!

இலாபம் கறப்பதை நிறுத்து! முதலாளித்துவ அமைப்பு ஒழிக!

பு.க.க. ஊர்வலத்தினர் மேற்கண்ட சுலோகங்களைக் கோஷித்தபடி இரத்தினம் மைதானத்தினுள் நுழைந்தனர்.

கூட்டத்துக்கு தலைமை தாங்கிய புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக மத்திய குழு உறுப்பினர் தோழர்.நந்த விக்கிரமசிங்க பேசுகையில் எட்டு மணித்தியால வேலை நாளுக்காகத் தொழிலாளர் வர்க்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட மே தினப் போராட்டத்தின் 110 ஆண்டு நிறைவைக் குறிக்கும் இந்த மே தினத்தில் உலகம் பூராவும் எட்டு மணித்தியால வேலை உட்பட்ட தொழிலாளர் வர்க்கத்தின் அடிப்படை உரிமைகள் பாரதூரமான தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளதாகக் குறிப்பிட்டார்.

“சம்பள வெட்டு, விலைவாசி அதிகரிப்பு, தொழில் வாய்ப்பு வெட்டு, ஜனநாயக உரிமைகள் பறிப்பு என்ற விதத்தில தொடுக்கப்படும் தாக்குதல்கள் முதலாளித்துவ உலக நெருக்கடியின் உள்ளே வேரூன்றி உள்ளன. வடக்கு-கிழக்கு தமிழ் மக்களுக்கு எதிரான இன்வாத யுத்தத்தைப் பயன்படுத்திக் கொண்டு வளர்ச்சி கண்ட இராணுவ பலத்தை முழு நாட்டினதும் தொழிலாளர் வர்க்கம் உள்ளடங்கலான ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராகப் பிரமாண்டமான அளவில் கட்டவிழ்த்துவிட முதலாளித்துவ ஆளும் வர்க்கம் தயாராகி வருகின்றது. தாம் யுத்தத்தைத் தொடர்ந்து உருவாக்கப் போவதாக சந்திரிகா பண்டாரநாயக்க அளந்து வரும் கதைகள் பெரும் சதிகள் நிறைந்த பொய்களை கொண்டுள்ளது. முதலாளித்துவ அரசாங்கம் கைவரப்பெறும் இராணுவ வெற்றிகள் ஆளும் வர்க்கத்தினால் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக இந்த இராணுவத்தை கட்டவிழ்த்துவிடுவதற்கான சந்தர்ப்பமாக அவர்களால் பயன்படுத்தப்படும் . பொதுஜன முன்னணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததில் இருந்து 17 ஆண்டுகளாக யூ..என்.பி.நடாத்தி வந்த தாக்குதல் விரைவுபடுத்தப்பட்டுள்ளதோடு அன்சல் லங்கா, கொரியா சிலோன், புளூ டயமன்ட் போன்ற தொழிற்சாலைகளில் தொழிலாளர்களுக்கு குண்டாந்தடி அடி, கண்ணீர்ப் புகை, துப்பாககிச் சூடு இடம்பெற்றுள்ளது. இதன் மூலம் அரசாங்கம் தொழிலாளர் வர்க்கத்தை இரத்தக் களரியில் மூழ்கடித்தேனும் ஏகாதிபத்திய-முதலாளித்துவ நிறுவனங்களின் இலாப வெறிக்கு அவர்களைப் பலியிட சபதம் பூண்டுள்ளது.” எனக் குறிப்பிட்டார்.



பு.க.க. மே தினக் கூட்டம் நடைபெற்ற கொட்டாஞ்சேனை அரத்தினம் மைதானத்திற்கு வருகை தந்தோரில் ஒரு பகுதியினர்

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் மத்திய குழு உறுப்பினரான தோழர். டபிள்யூ.ஏ.சுனில் பேசுகையில் உலகம் பூராவும் உற்பத்தி பூகோளமயமாக்கப்பட்டு வரும் ஒரு நிலையில் உக்கிரம் கண்டுவரும் முதலாளித்துவ அமைப்பின் நெருக்கடி தொழிலாளர் வர்க்கத்தின் தொழில், வாழ்க்கைத் தரங்களை மிலேச்சமான முறையில் சூறையாடுவதாகக் குறிப்பிட்டார்.

“கணனி, தொலைத் தொடர்பு சாதனங்களின் தொழில் நுட்பத்தின் மூலம் இன்று உலகம் பூராவும் -சிறப்பாக முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் தொழில் பெருமளவுக்கு வெட்டப்படுகின்றது. கி.பி.2000 அளவில் அவுஸ்திரேலியாவில் வங்கித் தொழில்களில் சரி அரைவாசி வெட்டப்படவுள்ளது. 1990ல் இருந்து இன்று வரை 45000தொழில்கள் வெட்டப்பட்டுள்ளன. அமெரிக்காவில்1990-1994க்கும் இடையே 24இலட்சம் தொழில்கள் அழிக்கப்பட்டுள்ளன. 1995ல் இத்துடன் இன்னும் ஆறு இலட்சங்கள் சேர்ந்து கொண்டன. 1994ல் ஜேர்மனியில் 180000தொழில்கள் வெட்டப்பட்டன. கார்,இயந்திர உபகரணங்கள், இரசாயன துறைகளில் 5 இலட்சம் தொழில்கள் வெட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இத்தாலியில் இரண்டு இலட்சம் தொழில்கள் வெட்டப்படுவதோடு இன்னும் வெட்டப்படும் ஆபத்து இருந்து கொண்டுள்ளது. 1979ல் இருந்து ஜீ.7 (குறூப்) முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் வேலையில்லாத் திண்டாட்டம் இரண்டு மடங்காகி 500 இலட்சங்களைத் தாண்டியது. இது மேலும் மேலும் வளர்ச்சி பெறும் அச்சுறுத்தல் இருந்து கொண்டுள்ளது.” என்றார். இந்நிலையில் பிரான்சிய தொழிலாளர் வர்க்கம் தமது வாழ்க்கை நிலையைக் காத்துக் கொள்ளும் பொருட்டு போராட்டத்தில் குதித்தமை உலக வர்க்கப் போராட்டத்தின் காலப்பகுதியைக் குறித்து நிற்கின்றது எனவும் உலகத் தொழிலாளர் வர்க்கத்துக்கு அவசியமான சோசலிச வேலைத்திட்டத்தை ஊர்ஜிதம் செய்யும் பொருட்டு அனைத்துலக ரீதியில் ஒன்றிணைந்து புரட்சிகரத் தலைமையை தயார் செய்ய வேண்டும் எனவும் தோழர்.சுனில் மேலும் குறிப்பிட்டார்.

அடுத்துப் பேசிய புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் மத்திய குழு உறுப்பினரான தோழர் .எம். அரவிந்தன் தோட்டத்துறையில் இடம்பெற்ற ஐந்து நாள் வேலைநிறுத்தம் இலங்கையின் தொழிலாளர் வர்க்க போராட்டத்தில் புதிய காலகட்டத்தைக் குறித்து நிற்பதாகச் சொன்னார்.

“தொண்டமானும், சமசமாஜ,கம்யூனிச, நவசமசமாஜக் கட்சிகளும் தொழிற்சங்க தலைமைகளும் ரூபா.8 சம்பள உயர்வு, 300நாள் வேலைநாள் கோரிய தொழிலாளர்களின் போராட்டத்தை காட்டிக் கொடுத்தனர். தோட்டத் தொழிலாளர்களைப் போலவே இலங்கையின் ஏனைய தொழிலாளர் வர்க்கத்தினரும் உலக முதலாளித்துவத்தின் நெருக்கடியில் இருந்து பெருக்கெடுத்து வரும் ஒரே தாக்குதலுக்கே முகம் கொடுக்கின்றனர். ஆதலால் தொழிலாளர் வர்க்கத்தின் சகல பகுதியினருக்கும் இடையே அனைத்துலக ஐக்கியத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் . அதனை சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் மட்டுமே சாதிக்க முடியும். தொழிலாளர் வர்க்கத்தினுள் அத்தகைய வேலைத் திட்டத்துக்குப் போராடக் கூடிய - தொண்டமான், சந்திரசேகரன் உட்பட்ட துரோகத் தலைவர்களுக்கு எதிராக போராடக்கூடிய போராட்டம் அவசியம். அவர்கள் முதலாளித்துவ வர்க்கத்தின் அரசாங்கத்தில் அமைச்சர் பதவி வகித்துக் கொண்டு தொழிலாளர் வர்க்கத்தைக் காட்டிக் கொடுக்கையில் இப்பணியை இட்டுநிரப்புகின்றார்கள்.

“தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசிய தனிச்சிறப்புரிமைவாதம் இன்று தமிழ் ஒடுக்கப்படும் மக்களைப் பெரும் ஆதாளபாதாளத்தில் தள்ளியுள்ளது. தமிழ் ஒடுக்கப்படும் மக்கள் கொழும்பு முதலாளித்துவ அரசாங்கத்தின் அலுகோசு இராணுவத்தின் ஆதிக்கத்திற்குக் கீழ்ப்படும் நிலைமை உருவாகியுள்ளது. இதற்கு விடுதலைப் புலிகளின் வங்குரோத்து அரசியலே காரணம்

“கொழும்பு முதலாளித்துவ அரசாங்கத்தின் இராணுவக் குண்டு வீச்சுக்களாலும் ஷெல் வெடி அடிகளாலும் 5 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் இருப்பிடமின்றிப் போயுள்ளார்கள். தமிழ் தேசிய இனத்தின் ஜனநாயக உரிமைகளை தொழிலாளர் வர்க்கத்தின் சோசலிச தலைமையின் கீழேயே காப்பாற்ற முடியும். அதலால் பு.க.க. அனைத்துலகக் குழுவின் ஏனைய பகுதிகளுடன் சேர்ந்து தமிழ் ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகளை ஊர்ஜிதம் செய்ய உறுதியாகப் போராடியுள்ளது." எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.”

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் இளைஞர் அமைப்பான இளம் சோசலிஸ்டுகள் இயக்கத்தின் சார்பில் பேசிய விஜித டீ சில்வா ஜே.வீ.பி.யின் குட்டி முதலாளித்துவ பாசிச வேலைகளைப் போலவே விடுதலைப புலிகளின் பிரிவினைவாதமும் இளைஞர்களை முட்டுச் சுவருக்குள் தள்ளியுள்ளது என்றார்.

கூட்டத்தின் இறுதியில் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் முதலாளித்துவ இனவாத யுத்தமும் அவசரகாலச் சட்டமும் மே தின தடையும் கண்டனம் செய்யப்பட்டதோடு அதற்கு எதிராக பு.க.க பதாகையின் கீழ் அணிதிரளும் படி தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களைக் கோரும் பிரேரணை ஒன்றும் நிறைவேற்றப்பட்டது. கூட்டம் அனைத்துலகக் கீதத்துடன் நிறைவுற்றது.

படிப்பகம்

www.padippakam.com

# தொழிலாளர் புரட்சிக் கட்சி நே

# பால்கனில் ஏகாதிபத்திய யுத்தமும் குட்டி (

(கடந்த இதழின் தொடர்ச்சி)

## நான்காம் அகிலத்தின் அனைத்துலக

### சர்வதேச நாணய நிதியத்தின் சிக்கனப் பாத்திரம்.

1970பதுகளின் முடிபின் தொடக்கத்தில் இருந்து வெளிநாட்டு வங்கிகளும் சர்வதேச நாணய நிதியமும் விதித்த சிக்கன வேலைத்திட்டத்தின் தொடர்ச்சியினால் யூகோசலாவியாவின் வீழ்ச்சி துரிதப்படுத்தப்பட்டது. இதன் நோக்கம், உள்நாட்டு நுகர்ச்சியை வெட்டிச் சரிப்பதன் மூலம் வீங்கி வரும் நாட்டின் வெளிநாட்டுக் கடன் கொடுப்பனவுகளைக் கறப்பதேயாகும். ச.நா.நி.யின் நடவடிக்கைகள் ஒரு பேரழிவுமிக்க தாக்கத்தை ஏற்படுத்தின. 1980பதுகளின் நடுப்பகுதியில் பணவீக்கமும் சம்பளக் கட்டுப்பாடும் நிஜ வருமானத்தை இரண்டு தசாப்தங்களின் ஆகக்குறைந்த ஊசலாட்ட மட்டத்துக்கு அனுப்பிய அதேவேளையில் வேலையின்மை பொருளாதார மந்த காலத்தை எட்டியது. இதன் பெறுபேறாக யூகோசலாவியா பூராவும் கெட்டியான நாணயத்தைக் கொண்டிருந்தவர்களுக்கும் அதைக் கொண்டிராதவர்களுக்கும் அத்தோடு செல்வம்படைத்த குடியரசுகளுக்கும் - சுலோவீனியா, குரோசியா- நாட்டின் ஏனைய பகுதிக்கும் இடையே சமூக துருவப்படுத்தல் வளர்ச்சி கண்டது.

சுலோவீனிய, குரோஷியன் கட்சி தலைவர்களும் அதிகாரத்துவங்களும் நீகன், தட்ச்சரின் பாஷையில் யூகோசலாவியாவில் "சொட்டு சொட்டு" பொருளாதாரப் பாணிக்காக வாதிட்டனர். குரோஷியாவிலும் சுலோவீனியாவிலும் உள்ள நிறுவனங்கள் பெரிதும் பரந்த ஏற்றுமதி பொருளாதாரத்தில் இருந்து கிடைக்கும் முழு வருமானங்களையும் தெற்கில் உள்ள குறைந்த முன்னேற்றம் கண்ட பகுதிகளின் அபிவிருத்திக்காக ஒரு பகுதியைப் பங்களிப்புச் செய்யாது வைத்திருக்க அனுமதிக்கப்பட வேண்டும் எனக் கோரின. இந்த நோக்கிலான வரிவிதிப்பு ஒரு தேசிய சுரண்டல் வடிவத்தினை எடுப்பதாக இவர்கள் குற்றம் சாட்டினர். ஆஸ்திரியா, ஜேர்மனியில் இருந்து வந்த மூலதனத்தின் அதிகரிப்புடன் அவர்கள் பெல்கிரேட் மத்திய அரசாங்கததின் கோரிக்கைகளை மீறிநடக்க முடிந்தது.

முன்னர் பொருளாதார பரவலாக்கத்துக்கு ஊக்குவித்து வந்த் சர்வதேச நாணய நிதியம் இன்று மத்திய அரசாங்கம் கண்டிப்பான நிதி, நாணய கட்டுப்பாடுகளை வேறுபட்ட குடியரசுகள் மீது திணிப்பதற்குப் பெரும் அதிகாரங்களைக் கொண்டிருக்க வேண்டுமெனக் கோரியது. சமூக நெருக்கடியைத் தீர்ப்பதற்கு முன்னேற்றமான எந்தவொரு சாதனமும் மறுக்கப்பட்ட நிலையில் பெல்கிரேட் அரசாங்கம் வெளிநாட்டு வங்கிகளுக்கான ஒரு சேர்த்தல் ஏஜன்சி பாத்திரத்தை எடுத்தது. வேறுபட்ட குடியரசுகளின் அதிகாரத்துவங்களும் இந்த மத்திய அரசாங்கத்தினை ஆதரிப்பதில் அக்கறை காட்டவில்லை. அதற்குப் பதிலாக தமது பொருளாதார, அரசியல் சுயாதிக்கத்தை அதிகரிப்பதிலேயே அக்கறை காட்டின.

### ஒரு புரட்சிகர முன்னோடி நிலைமை

'Insightful study of Yugoslavia's disintegration, Balkan Tragedy'யின்ஆசானான சுசான் வூட்வாட் குறிப்பிடுவது போல்: 1985-86 அளவில் ஒரு புரட்சிகர நிலைமைக்கான முன்நிபந்தனைகள் வெளிப்படையாகத் தோன்றின. சுலோவீனியாவையும் குரோஷியாவையும் தவிர்ந்த ஏனைய சகல குடியரசுகளிலும் அதிகரித்த வேலையின்மை வீதம் 20வீதத்துக்கும் அதிகமானதாக இருந்தது. பணவீக்க்ம் ஒரு வருடத்துக்கு 50வீதமாகவும் உயர்ந்தும் சென்றது.சனத்தொகையில் கிட்டத்தட்ட 80 வீதமானோரின் சேமிப்புக்கள் அழிந்து போயின. உள்நாட்டு நாணயமாற்றில் டியுச் மார்க் ., அமெரிக்க டாலர் போன்ற மேற்கத்தைய நாணயங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டன. ஒதுக்கீட்டுத் தீர்மானங்கள் அதிகரித்த அளவில் உயிர் நீடிப்புக்குரிய விறைப்பான பிரச்சனைகளாகின. நெருக்குவாரங்களைப் போக்கும் முயற்சிகள் பணவீக்கத்தை மோசமாக்கியதோடு பொருளாதார முகாமைத்துவத்தையும் பாதித்தன. இந்தப் பொருளாதார துருவப்படுத்தல் சமூகத் துருவப்படுத்தலுக்கு இட்டுச் சென்றது (Balkan Tragedy )

யூகோசலாவிய தொழிலாளர் வர்க்கம் நாற்றம் கண்ட அதிகாரத்துவ அரசுக்கு பதிலாக தனது சொந்த சுயாதீன அரசியல் பதிலீட்டை வழங்குவதன் மூலம் இந்த புரட்சிகர முன்னோடி நிலைமையில் இருந்து பலன்பெற முடியாததென நிரூபித்துவிட்டது. இதற்குப் பதிலாக ஆளும் அதிகாரத்துவங்கள் தீவிரவாத தேசியவாதிகளுடனும் முழு பாசிச எதிர்க்கட்சியுடனும் வெளிநாட்டுக் குழுக்களுடனும் சேர்ந்து இந்த புரட்சிகர முன்னோடி நிலைமையை ஒரு உடன்பிறப்பைக் கொல்லும் போராட்டமாகத் திருப்பவும் புதிய இனக்குழு ஒரே சீரான பிராந்தியங்களைப் பிரிக்கவும் முடிந்தது.

இது ஒரு தொழிலாளர் வர்க்கப் போராட்டக் குறைவினால் ஏற்பட்டதல்ல. சர்வதேச நாணய நிதியத்தின் சிக்கன வேலைத்திட்டத்தின் முதல் சுற்று பேச்சுவார்த்தைகளின் விளைவாக 1982-1983 வரை1570 வேலைநிறுத்ததில் 365,000 தொழிலாளர்கள் பங்கு கொண்டதாக அறிவித்தது.1988ல் வேலைநிறுத்தங்களின் எண்ணிக்கை 2000 க்கு உயர்ந்தது. 1988ன் முடிவில்-யுத்தத்தின் வெடிப்புக்கு மூன்று ஆண்டுகள் முன்பாக- குரோஷியா, வொஜ்வோடினா, சேர்பியாவைச் சேர்ந்த பரந்த தொழிலாளர் தூதுக் குழுக்கள் யுத்தத்தின் பின்னைய காலப் பகுதியில் முதற்தடவையாக் பெல்கிரேட்டில் உள்ள சமஷ்டி பாராளுமன்றத்தின் படிகளுக்கு எதிர்ப்புக் காட்டச் சென்றனர்.

வென்றெடுக்கப்பட்ட சனத்தொகையின் பெருந்தொகையினர் அதன் ஆதரவினை தேசியவாத தனிச்சிறப்புரிமைவாதத்துக்கு வழங்கினார்கள் அல்லர். யுத்த முயற்சிகளுக்கு எதிராக இடைவிடாது இடம்பெற்றுவந்த ஆர்ப்பாட்டங்கள் யூகோசலாவியா கூறுபோடப்படுவதற்கு பரந்த எதிர்ப்பைக் காட்டின. எவ்வாறெனினும் தொழிலாளர் வர்க்கத்திடம் இல்லாதிருந்தது மாஜி-ஸ்டாலினிச அதிகாரத்துவங்கள், இனவாத அரசியல்வாதிகளின் கூட்டுக்கு எதிராக ஒரு சுயாதீனமான போராட்டத்தில் ஐக்கியப்பட வல்ல ஒரு முன்னோக்கும் தலைமையுமாகும். தொழிலாளர் வர்க்கத்தின் கணிசமான பகுதியினரும் - குறிப்பாக இளைஞரும் ஸ்டாலினிசத்தின் நாசகரமான கொள்கைகளதும் தமது சொந்த ஆட்சியையும் சலுகைகளையும் சோசலிசத்துடன் இனங்காட்டிக் கொள்ளும் யூகோசலாவிய அதிகாரத்துவங்களதும் கிழக்கு ஐரோப்பா பூராவும் உள்ள அதன் சகாக்களதும் முய்ற்சிகளதும் பெறுபேறுகளால் குழம்பிப் போயுள்ளனர்.

ஒரு உலகளாவிய ரீதியில் தொழிலாளர் வர்க்கம் எதிர் கொள்ளும் தலைமை நெருக்கடிக்கு யூகோசலாவியா ஒரு ஆழமான வெளிப்பாட்டினை வழங்குகின்றது. தொழிலாளர் இயக்கத்தை ஆளுமை கொண்டிருந்த அதிகாரத்துவங்கள் - ஸ்டாலினிஸ்ட், சமூக ஜனநாயகம், தொழிற்சங்கம் - ஒன்றில் தமது தோற்றத்தில் இருந்தே அல்லது நீண்ட காலத்துக்கு முன்னரே முதலாளித்துவத்துக்கு எதிரான தொழிலாளர் வர்க்கத்தின் அனைத்துலக ஐக்கியத்தை எதிர்த்தனர் அல்லது நிராகரித்தனர். இவர்கள் அனைவரும் தேசியவாதத்தை அடிப்படையாகக் கொண்ட கொள்கைகளைக் கடைப்பிடித்தனர். இலாப முறைக்கு ஆதரவு வழங்கினர். இந்த அரசியல் வெற்றிடம் ஏற்பட்ட நிலையில் தலைதூக்கிவந்த முதலாளி வர்க்கம் யூகோசலாவியாவில் நிலவி வந்த சமூக நிலைமையுடனான பாரிய அதிருப்தியை வலதுசாரி, சோவினிச திசைகளில் திருப்ப முடிந்தது.

வேறொரு காலப்பகுதியில் கொலைகாரர்களாகவும் பைத்தியக் காரர்களாகவும் புறக்கணித்துவிடக்கூடிய புள்ளிகள் தேசிய வீரர்கள், அரசியல் தலைவர்கள் அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டனர். எந்தவிதமான தொழில் வாய்ப்புக்களையும் கண்டு கொள்ளும் சாத்தியம் இல்லாத பாடசாலை பட்டதாரிகளும், வேலையற்ற இளைஞர்களும் மற்றும் ஒடுக்கப்பட்ட தட்டினரும் ஒரு புரட்சிகரப் பாதையைக் கண்டுகொள்வதற்கு மாறாக இனக் குழுக்களை அடிப்படையாகக் கொண்ட இராணுவத்திலும் படைகளிலும் ஒருவர் மற்றவரைக் கொலை செய்யத் திரட்டப்பட்டனர். முன்னைய யூகோசலாவியாவில் உடன்புறப்பைக் கொல்லும் உள்நாட்டு யுத்தத்தின் மாதிரி ஆகாயத்தில் இருந்து விழவில்லை.இது ஒரு புரட்சிகர தலைமையும் முன்னோக்கும் இல்லாததற்காக யூகோசலாவிய தொழிலாளர் வர்க்கம் செலுத்திய விலையாகும். எனவேதான் இந்த இழிவான அபிவிருத்திகளை ஒரு "தேசிய சுயநிர்ணயத்துக்கான" போராட்டமாகக் காட்டப் பொன்னாடை போர்த்தும் தொழிலாளர் புரட்சிக் கட்சியினதும் மற்றும் சுயபிரகடன "சோசலிஸ்டுகளதும்" நடவடிக்கைகளை அந்தளவுக்கு பிற்போக்கானதாக்குகிறது.


## பாகம் -2

### இனக்குழுவியலும் சுதந்திரமும்

யூகோசலாவிய குடியரசுகளில் தேசிய பிரிவினைவாதப் பாதையை எடுப்பதில் சுலோவீனியா முதலாவதாக விளங்கியது. இது பழைய குடியரசுக்கு சுலோவீனிய இனக்குழு தேசிய சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சுதந்திரம் கோரியது. குரோஷியா, சுலோவீனிய உதாரணத்தை பின்பற்றியது. எவ்வாறெனினு
குரோஷியாவில் இவ்விடயம் பெரிது
சிக்கலாகியது. இக்குடியரசு ஒரு சேர்பி
சிறுபான்மையினரைக் கொண்டிருந்தது. இ
யுகோசலாவியா பிரிக்கப்படும் முன்ன
சனத்தொகையின் 12.2 வீதமாக இருந்தது
இந்தச் சிறுபான்மையினர் திடீரென ஒ
புதிய சுதந்திர குரோஷியாவினுள் ஒ
சுவருடன் நிறுத்தப்பட்டனர். இது கடந்
தடவை இரண்டாம் உலக யுத்தத்தின் போ
நடைபெற்றது. குரோஷிய சேர்பியர்க
சித்திரவதை முகாம்களுள் கூட்டம் கூட்டமாக
தள்ளப்பட்டு இலட்சக் கணக்கில் கொலை
செய்யப்பட்டனர்.

டிட்டோ சகாப்தத்தின் குரோஷியன்
குடியரசின் அரசியலமைப்புச் சட்ட
சேர்பியர்களின் அச்சத்தைப் போக்க
குடியரசினை "குரோஷிய சேர்பியர்களுடன்
சகோதர ஐக்கியமான குரோஷிய மக்கள்
சமூகம் எனப் பிரகடனம் செய்தது. ருட்ஷ்மன்
தலைமையிலான தேசியவா
அரசியல்வாதிகளால் வரையப்பட்ட பத்திர
குடியுரிமையை இனக்குழுவுடன்
தொடர்புபடுத்தி சேர்பியர்கள் பல
நூற்றாண்டுகளாக வாழ்ந்த நாட்டினுள்
அவர்களை ஒரு ஈன நிலைக்குத்
தள்ளியதோடு சுதந்திர குரோஷியா குரோஷிய
தேசிய இனத்தின் அரசாகும் என
பிரகடனம் செய்தது. ருட்ஷ்மன் ஆட்சி
இனக்குழு தேசியவாதத்தின் மறுகிளர்ச்சியை
சேர்பியர்களுக்கு எதிரான பாகுபாடுகளுடன்
தொடர்புபடுத்தியது. இது இரண்டாம் உலக
யுத்த சகாப்த கால உஷ்டாசே(பாசிசம்
ஆட்சியின் சின்னத்தை புனருத்தாரணம்
செய்ததோடு அதன் அரசியலையும்
புனருத்தாரணம் செய்ய முயன்றது. இதற்கு
பதிலாக சேர்பிய தேசியவாதப் போக்குக்கள்
யூகோசலாவிய அரசியலமைப்புச் சட்டத்தின்
கீழ் உத்தரவாதம் செய்யப்பட்ட தமது
சுயநிர்ணயத்துக்கான உரிமையை
வலியுறுத்தினர். அவர்கள் குரோஷியாவில்
இருந்து பிரிந்து சேர்பியாவுடன்
ஐக்கியப்படவேண்டும் எனக் கோரினர். யுத்தம்
தவிர்க்க முடியாத பெறுபேறாகியது.

பொஸ்னியாவில் இனக்குழு
தேசியவாதத்தின் எழுச்சி மாபெரும்
அச்சுறுத்தலை உருவாக்கியது. இங்கு
இனக்குழு பெரும்பான்மை இல்லாததோடு
மூன்று இணைந்த சனத்தொகையும்
பெருமளவுக்கு ஒன்றுடன் ஒன்று கலந்தே
இருந்தன். சனத்தொகையில் 40 வீதத்துக்கு
சற்றுக் குறைவான முஸ்லீம்கள்
எண்ணிக்கையில் அதிகமானவர்களாக
விளங்கினர். இதே சமயம் சேர்பியர்கள் 30
வீதத்துக்கு அதிகமானவர்களாகவும்



போட்டியிட்டுக் கொண்டு பொஸ்னியாவினுள் நுழையும் ஐ.நா. யுத்த தாங்கிகள்

படிப்பகம்

www.padippakam.com

# .டோ முகாமில் சேர்ந்தது எப்படி?

# தலாளித்துவ இடதுசாரிகளின் சிதைவும்

## குழுவின் அறிக்கை–1995 டிசம்பர் 14




..ரோஷியர்கள் 17 வீதத்தினர்களாகவும் ..ாணப்பட்டனர்.

அத்தோடு இங்கு இனக்குழு தேசியவாதக் கட்சிகள் மேலாதிக்கம் செலுத்தின. இதனைப் புரிந்து கொள்ள ஒருவர்அரசியல் மையத்தில் வைத்து– யூகோசலாவியாவின் சிதைவுகள், சுலோவீனியா, குரோஷியா, சேர்பியாவில் உக்கிரமான தேசியவாத இயக்கங்களின் எழுச்சி,எல்லாவற்றுக்கும் மேலாக தொழிலாளர் வர்க்கத்தின் புரட்சிகர தலைமை இன்மை–அணுகவேண்டும். 1990 தேர்தல்களில் இஸட்பெகோவிக்கின் முஸ்லீம் எஸ்.டி. எ. குரோஷிய எச்.டீ.இசட். சேர்பிய எஸ்.டீ.எஸ். என்ற மூன்று கட்சிகளும் கூட்டாக 80 வீத வாக்குக்களை பெற்றன. இவை ஒவ்வொன்றும் தாம் பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறிக் கொண்ட இனக்குழு சமூகத்தின் சனத்தொகைக்குச் சமமான பங்கு வாக்குக்களை பெற்றன. இக்கட்சிகள் ஒவ்வொன்றும் இனக்குழு அடையாளங்களின் அடிப்படையில் வாக்களிக்கும்படி அழைப்புவிடுத்தன. இவை அனைத்தும் அடியோடு கம்யூனிஸ்ட் விரோதிகள். மேலும் இம்மூன்று கட்சிகளும் தமது இனக்குழு –இனவாத வேண்டுகோள்களை பழைய குடியரசு எல்லைகளுக்கு ஊடாக விடுத்தனர்.

சேர்பியர்கள் தனி அரசினுள் ஒன்றிணைக்கப்பட் வேண்டும் என்ற பழைய கோரிக்கைக்கு உயிரூட்டிய எஸ்.டி.எஸ்.குரோஷியாவிலும் பொஸ்னியாவிலும் சேர்பிய சிற்றூர்களை வெட்டித் துண்டாட முயற்சித்தது. தம்மை "அகில உலக குரோஷியர்களின் கட்சி" என அழைத்துக் கொண்ட எச்.டி.இஸட். அமைப்பு தமது இலக்கு குரோஷியாவுடன் இணைந்து கொள்வதே என்பதை ஒழித்து மறைக்காமல் மேற்கு ஹேர்ஷிகோவினாவை கைப்பற்றிக் கொண்டது. இறுதியாக இஸட்கோவிக்கின் எஸ்.டீ. ஏ. அமைப்பு சேர்பியாவின் சண்ட்சாக் பிராந்தியத் தினுள்ளும் மொண்டேநீக்ரோ பிராந்தியத்தினுள்ளும் ஆதரவுதேடியது. அவற்றின் முஸ்லீம் ஜனத்தொகை பொஸ்னியாவின் முஸ்லீம்களுடன் ஒன்றிணையவேண்டும் என வலியுறுத்தியது

இவற்றின் பல்வேறு தேசியவாத திட்டங்களினால் வெளிப்படையான மோதல்கள் இருந்து கொண்டிருக்கையிலும் இம்மூன்று கட்சிகளும் பெருமகூட்டரசாங்கத்தை அமைத்தன. இனக்குழு அடிப்படையில் அழைப்பு விடுத்த சகல கட்சிகளையும் அரசாங்கத்தில் இருந்து தவிர்த்துக் கொண்டன.

பொஸ்னிய சேர்பிய, குரோஷிய தேசியவாதிகள் பொஸ்னியாவை பிரிக்கவும் தமது சொந்த இனக்குழு பிராந்தியங்களை முறையே சேர்பியாவுடனும் ..ரோஷியாவுடனும் இணைக்கவும் ஆதரவு வழங்கினர்.எவ்வாறெனினும் முஸ்லீம் தேசியவாதிகள் பொஸ்னிய–ஹெர்ஸ்கோவினாவுக்கு வெளியே அத்தகைய ஒரு போசகரைத் தேடிக்கொள்ள முடியவில்லை. ஆதலால் அவர்கள் பழைய பொஸ்னிய –ஹேர்ஸ்கோவினா குடியரசின் எல்லைகளின் தூய்மையை வலியுறுத்தி வந்தனர். பல்லினத் தன்மையைக் கொண்டு அவர்கள் பிராந்தியத்தின் ஆதிக்கத்தைக் கொண்டிருக்க முயற்சிக்கின்றனர். இதுவே எஸ்.டி.ஏ.யின் பல்லின–இனக்குழு எனப்ப்டுவதன் ஆதரவின் அடிப்படையாக விளங்கியது.

### பொஸ்னியாவின் சுதந்திரம்

1991 அக்டோபரில் முஸ்லீம் எஸ்.டி.ஏ.யும் குரோஷியன் எச்.டி.இசட்டும் பொஸ்னியா–ஹேர்ஷ்கோவினாவை ஒரு சுதந்திர அரசாகப் பிரகடனம் செய்யும் பிரேரணையை நிறைவேற்ற இணைந்தனர். இது பொஸ்னிய தேசிய சுதந்திரத்தின் பேரிலான ஏதோ ஒரு வெகுஜன இயக்கத்தின் பிரதிபலிப்பு அல்ல. அத்தகைய ஒன்று இருக்கவில்லை. எஸ்.டி.ஏ. முதலில் சுதந்திரத்தை எதிர்த்து இருந்தது. இசத்கோவிக் பொஸ்னியாவில் உள்நாட்டு யுத்தம் வெடிக்கும் என்ற அச்சத்தினால் குரோஷியாவை அங்கீகரிக்க மறுக்குமாறு மேற்கத்தைய நாடுகளின் ஆதரவை திரட்டினார்.சுலோவீனியாவும் குரோஷியாவும் பிரிவினையுடன் முன்சென்றதைத் தொடர்ந்து எஸ்.டி.ஏ. அதன் சொந்த தேசியவாதத் திட்டத்துக்கு ஏகாதிபத்திய ஆதரவை வெற்றி கொள்ளும் நம்பிக்கையுடன் ஏற்றதை செய்யத் தீர்மானித்தது. எச்.டி.இசட். இந்நடவடிக்கையை குரோஷியாவுடன் ஒன்றிணைகின்றதும் பங்கு கொள்கின்றதுமான ஒன்றாகக் கண்டது.

சேர்பிய எஸ்.டி.எஸ். அரசாங்கத்திலிருந்து வெளியேறியதன் மூலம் சுதந்தரப் பிரகடனத்துக்கு தனது எதிர்ப்பைக் காட்டிக் கொண்டது. இந்நடவடிக்கையை அத்தகைய எந்த ஒரு தீர்மானத்தின் போதும் மூன்று குழுக்களுக்கு இடையேயும் இணக்கம் வேண்டும் என்ற அரசியலமைப்புக் கோரிக்கைய்ய இது மீறுவதாகும் என அது கண்டனம் செய்தது. ஐரோப்பிய சமூகத்தின் அங்கீகாரத்தை வென்றெடுக்கும் பொருட்டு திடீரென – 1992 பெப்ரவரி 29–மார்ச் 1 அன்று –முஸ்லீம்–குரோஷியர்கள் முன்னணி சுதந்திரத்தின் மீது அதனது கருத்துக் கணிப்பை நடாத்தியது. சனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் –சேர்பியர்களில் பெரும்பான்மையினர் வாக்களிப்பைப் பகிஷ்கரித்தனர்.

ஒரு கருத்துக் கணிப்பு அது சகல மூன்று சமூகத்தினதும் பங்குபற்றலைப் பெற்றுக் கொண்டால் மட்டுமே மேற்கத்தைய வல்லரசுகள் அதனை சட்டரீதியானதாகக் கொள்ளும் என்ற முன்னைய வாக்குறுதிக்கு இடையேயும் மேற்கு ஐரோப்பாவும் அமெரிக்காவும் அங்கீகாரம் வழங்கின. அப்போது சேர்பியர்களுக்கும் குரோஷியர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையேயான உள்நாட்டு யுத்தம் ஏற்கனவே நன்கு ஆரம்பமாகிவிட்டிருந்தது. பழைய யூகோசலாவிய மக்கள் இராணுவத்தில் இருந்து வந்த பொஸ்னியன் சேர்பிய இராணுவப் பிரிவுகள் பொஸ்னியாவில் மிகவும் சக்தி வாய்ந்த இராணுவத்தை பிரதிநிதித்துவம் செய்தன. இவை தீவிரவாத தேசிய இராணுவத்தினாலும் சேர்பிய கொலைகார கும்பல்களாலும் ஆதரிக்கப்பட்டன. குரோஷியாவும் கூட் நிரந்தர படைப்பிரிவுகளை பொஸ்னியாவுக்குள் அனுப்பியது. இவை பாசிச, தேசிய இராணுவத்துடன் அக்கம்பக்கமாக தொழிற்பட்டன. இவ்விரு படைகளதும் முக்கிய தாக்குதல்கள் முஸ்லீம் பொதுஜனங்களுக்கு எதிராகவே தொடுக்கப்பட்டன. பொஸ்னிய மோதலில் ஏற்பட்ட அழிவுகளில் பிரமாண்டமான பங்கினை முஸ்லீம் மக்களே தாங்கிக் கொள்ளவும் நேரிட்டது.

முஸ்லீம் ஆதிக்கத்தின் கீழான பொஸ்னிய அரசாங்கப் படைகள் ஆரம்பத்தில் சரஜீவோவின் கொள்ளையர் மூலகங்களில் இருந்தே ஈர்க்கப்பட்டன. அவர்கள் நகரத்தைப் பாதுகாப்பது என்பது அவர்கள் அதன் இலாபகரமான கறுப்புச் சந்தையைப் பாதுகாப்பதுடன் தவிர்க்கமுடியாத விதத்தில் பிணைக்கப்பட்டிருந்தது.

ஒவ்வொரு குழுக்கழும் தமக்கு பாதுகாத்துக் கொள்ளக்கூடிய பிராந்தியங்களை கூறுபோட்டுக் கொள்ள முயன்ற அதே வேளையில் போர் வளர்ச்சி கண்டதும் இசெட்பெகோவிக் அரசாங்கம் ஒரு முஸ்லீம் குட்டி அரசைக் கூறுபோட்டுக் கொள்ளும் திட்டத்துடன் இணைந்த விதத்தில் தாம் முழு பொஸ்னியாவையும் பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறும் கோரிக்கையுடன் பெரிதும் இணைந்து கொண்டனர். 1993 அளவில் எஸ்.டீ.ஏ.அரசியல்வாதிகளும் முஸ்லீம் படைகளும் பொஸ்னிய தேசிய அடையாளம் என்ற நடிப்புக்களை பெரிதும் கைவிட்டதோடு ஒரு முஸ்லீம் அரசை அமைக்க வெளிப்படையாக தொழிற்பட்டனர். முஸ்லீம் அல்லாதவர்கள் கிராமங்களில் இருந்தும் நகரங்களில் இருந்தும் வெளியேற்றப்பட்டனர்.அதே சமயம் அரசாங்க அதிகாரிகள் கலப்பு திருமணங்களை கண்டித்ததோடு பாடசாலைகளில் மத போதனைகளின் அறிமுகத்தை பகிரங்கமாக வேண்டினர்.1994ல் பொஸ்னிய குரோஷியர்களுக்கு முழு தேசிய உரிமைகள் கிடைக்கும் விதத்தில் வாஷிங்டனால் செய்யப்பட்ட புரோக்கர் வேலையின் மேல் பெடரேசனில் சேர்வதன் மூலம் இசத்பெகோவிக் ஆட்சி பிரிவினையை வலுவாக ஆதரித்ததோடு முஸ்லீம் அரச அந்தஸ்தையும் நடைமுறைரீதியாக அங்கீகரித்தன். சோசலிஸ்டுகள் பேணிக்காக்க வேண்டும் என தொழிலாளர் புரட்சிக் கட்சி கூறிக் கொள்ளும் "பல்லின" பொஸ்னிய அரசின் யதார்த்தம் இதுதான்.

பொஸ்னியாவிலும் அவ்வாறே பழைய யூகோசலாவியாவிலும் சனத்தொகையில் பெரும் பகுதியினர் இனக்குழு தேசியவாதத்தை எதிர்க்கின்றனர். எஸ்.டி.ஏ.அமைப்பு சகல முஸ்லீம்களையோ அல்லது எஸ்.டீ.எஸ் .அமைப்பு சகல சேர்பியர்களையோ அல்லது எச்.டீ.இசட்.அமைப்பு சகல குரோஷியர்களையோ பிரதிநிதித்துவம் செய்வதாய் இல்லை. 1991 யூலையில் 50000க்கும் அதிகமான மக்கள் சரஜீவோவில் யுத்தத்துக்கு எதிராகவும் ஒரு ஒன்றுபட்ட யூகோசலாவியாவுக்கு ஆதரவாகவும் ஊர்வலம் நடாத்தினர். பொஸ்னியாவை நாசமாக்கும் இன இராணுவங்களில் இருந்தும் படைகளில் இருந்தும் சேர்பிய, குரோஷிய, முஸீம்களை பாதுகாத்துக் கொள்ளும் முறை பற்றி பல அறிக்கைகள் வந்துகொண்டுள்ளன. இருந்தபோதும் தொழிலாளர் புரட்சிக் கட்சி மக்களின் இந்த நிசமான உணர்வுகளை குரோஷிய, முஸ்லீம் தேசியவாத அரசியல்வாதிகளது சிடுமூஞ்சித்தனமான கணிப்புக்களுடன் ஒப்பிடுவதோடு அவற்றை "பொஸ்னியன் சுயநிர்ணயத்துக்கான" ஆதரவாகக் கொள்கின்றது. அதன்மூலம் அது அரசியல் சூழ்நிலையை நச்சுப்படுத்தவும் பொஸ்னிட, பால்கன் தொழிலாளர் வர்க்கத்தை முழுமையாக – இனக்குழு அடிப்படையில் பிரிக்கவும் உதவுகின்றது

(அடுத்த இதலில் நிறைவுபெறும்)

– தொடரும் –

படிப்பகம்

www.padippakam.com

# தோட்டத் தொழிலாளர் வேலைநிறுத்தம்: புரட்சிக் கம்யூனிஸ்ட்கழகம் பலம்வாய்ந்த தலையீடு

ரீ.என். நிஹிஷான்

ஆறு இலட்சம் தோட்டத் தொழிலாளர்களை போராட்டத்தில் இறங்கச் செய்து ஏப்ரல் 22-27 வரை நீடித்த அடையாள வேலைநிறுத்தம் நாடுதழுவிய ஒன்றாக விளங்கியது. நுவரெலியா, அட்டன், மஸ்கேலியா,நாவலப்பிட்டி, இரத்தினபுரி, மத்துகம, காலி,மாத்தறை முதலான இடங்களைச் சேர்ந்த தேயிலை ,இறப்பர், தெங்கு தோட்டத் தொழிலாளர்கள் தொழிற்சங்க வேறுபாடு இல்லாமல் இந்த வேலை நிறுத்தத்தில் பங்கு கொண்டனர். இந்த வேலை நிறுத்தத்தில் மலையகத்தின் தமிழ் பேசும் தொழிலாளர்கள் மட்டுமன்றி தென்மாகாணங்களின் சிங்களம் பேசும் தொழிலாளர்களும் பல்லாயிரக் கணக்கில் கலந்து கொண்டனர்.


முதலாளித்துவ அரசாங்கத்தினதும் தொழிற்சங்கங்களின் துரோக அதிகாரத்துவங்களினதும் பிரமாண்டமான பிற்போக்கு நெருக்குவாரங்களின் மத்தியில் இந்த அடையாள வேலைநிறுத்தம் தொடுக்கப்பட்டது.

பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் அமைச்சரான இ.தொ.க. தலைவர் தொண்டமான் இந்த வேலைநிறுத்தத்தை நடர்த்துவது அரசாங்கத்தை சங்கடத்துக்கு உள்ளாக்குவதற்கு அல்ல எனவும் வளர்ச்சி கண்டுவரும் தொழிலாளர் வர்க்கத்தின் கொதிப்பில் இருந்து அரசாங்கத்தைக் காப்பதற்கே எனவும் பகிரங்கமாகவே குறிப்பிட்டிருந்தார். சமசமாஜ, ஸ்டாலினிஸ செங்கொடிச் சங்கம்,ஜ.தொ.க. தலைவர்கள் இதற்கு பின்னணி பாடிய அதே வேளையில் பீ.சந்திரசேகரனின் மலையக மக்கள் முன்னணியும் சி.ல.சு.க.வும் கருங்காலி நடவடிக்கையில் வெளிவெளியாகவே ஈடுபட்டனர்.

தோட்டத் துறையினுள் வளர்ச்சி கண்டு வரும் குமுறல்களை முன்கூட்டியே நசுக்கும் பொருட்டு பொதுஜன முன்னணி அரசாங்கம் ஏப்பிரல் 4ம் திகதி நாடு பூராவும் அவசரகாலச் சட்டத்தைப் பிறப்பித்தது. அவசரகாலச் சட்டத்தைப் பிறப்பித்ததன் முக்கிய இல்க்கு, தோட்டத் தொழிலாளர்களை பயமுறுத்தி , இனவாதத்தை தூண்டிவிட்டு அவர்களின் போராட்டத்தை சிதறடிப்பதாக இருந்தது. ஆனால் அது இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான சிங்களத் தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் தமிழ் தொழிலாளர்களுடன் கலந்து கொண்டதால் சரிப்பட்டு வரவில்லை.

இ.தொ.க.வும் தோட்டத் தொழிற்சங்க கூட்டணியும் பல வருடங்களாக ஒத்திப்போட்டு வந்த இந்த வேலை நிறுத்தப் போராட்டம் தொழிலாளர்களின் நெருக்குவாரம் காரணமாக பல கால் கட்டுக்களுடன் இறுதியில் ஆரம்பிக்கப்பட்டது. இப்போராட்டத்தின் முக்கிய கோரிக்கைகளாக நாட் சம்பளத்தில ரூபா.8 அதிகரிப்பு, ஆண்டொன்றுக்கு 300நாள் வேலை நாள் என்பன அடங்கியிருந்தன. இ.தொ.க. - தலைவர் தொண்டமான் இந்த வேலை நிறுத்தத்தை தோட்டங்களிலும் கோவில்களிலும் நடாத்தும பூஜைகள், சத்தியாக்கிரகங்களுடன் மட்டுப்படுத்திவிட முயற்சித்தார். அங்ஙனம் செய்வதற்கு தலைவர்கள் பொறுப்பாக இருக்கவேண்டும் எனவும் உத்தரவிட்டுவிட்டு தொண்டமான் உத்தியோகபூர்வ விஜயமாக இந்தியா புறப்பட்டார். ஏனைய சகல துரோகத் தலைவர்களும் தோட்டங்களுள் ஒரு கூட்டமோ அல்லது ஒரு ஊர்வலமோ நடைபெறாதிருக்கும் வண்ணம் பார்த்துக் கொண்டனர்.

வேலைநிறுத்தத்தில் கலந்து கொண்ட இலட்சக் கணக்கான தொழிலாளர்களின் உயிர்த் துடிப்பினைத் துடைத்து எறியும் இந்த ஸ்தம்பித வேலை நிறுத்தத்தினுள் தொழிலாளர்களின் போராட்ட வீரியத்தை சுடர்விடச்செய்து வேலைத்திட்டமும் தலைமையும் வழங்க இடைவிடாது போராடியது, புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் அதன் தொழிற் சங்கமான பெருந்தோட்டக் கைத்தொழில் தொழிலாளர் சங்கமுமேயாகும். அதன் அங்கத்தவர்கள் பல தோட்டங்களில் கூட்டம், ஊர்வலம், மறியல்களை நடாத்துவதன் மூலம் நூற்றுக் கணக்கான தொழிலாளர்களிடையே வர்க்கப் போராட்டத்தின் தீச்சுவாலையை மூட்டினார்கள். இந்தத் தொழிலாளர்கள் பெ.கை.தொ.ச. ஒழுங்குசெய்த மறியல், ஊர்வலங்களில் தொழிலாளர்கள் கலந்து கொண்டமை வர்க்க உறவுகளில் இடம்பெற்றுவரும் பாரிய மாற்றங்களைப் பிரத்தியட்சமாக்கியுள்ளது.



பு.க.க. அங்கத்தவர்கள் தோட்ட வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களுடன் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்த வேளையில்

## பென்மூர் தோட்டம்

ஏப்பிரல் 22ம் திகதி காலையில் அட்டன் ஸ்ரத்டன் தோட்டத்தின் பென்மூர் டிவிசனில் ஒழுங்கு செய்த மறியலில் அயல் தோடட்ங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் உட்பட சுமார் 25 பேர் கலந்துகொண்டன்ர். அவர்கள் தோட்ட தனியார்மயத்தை நிறுத்து! ரூபா.5000 குறைந்த பட்ச மாதச் சம்பளம் வழங்கு! தொழில் ,வீடு, தண்ணீர் பிரச்சினைகளை தீர்த்து வை! அரச ஒடுக்குமுறையை நிறுதது!அவசர காலச் சட்டத்தை நீக்கு! தோட்டத்துறையின் அரசியல் கைதிகளை விடுதலை செய்! இனவாத யுத்தத்தை நிறுத்து! தேசிய பிரிவினைவாதத்தை நிராகரி! நடவடிக்கை, பாதுகாப்பு குழுக்களை கட்டியெழுப்பு! சோசலிச வேலைத் திட்டத்தின் அடிப்படையில் போராடு! பு.க.க.வையும் பெ.கை.தொ.ச.வையும் கட்டியெழுப்பு! தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கத்தை கட்டியெழுப்பு ! முதலான போராட்ட சுலோகங்களை அவர்கள் கோஷித்தனர்.தொழிலாளர்கள் இந்த சுலோக அட்டைகளைத் தாங்கிய வண்ணம் -சுலோகங்களைக் கோஷித்தவாறு பென்மூர் டிவிசனில் இருந்து டன்பார் தோட்டம் வரை ஊர்வலத்தில் சென்ற போது நூற்றுக் கணக்கான தொழிலாளர்களின் பேராதரவு கிடைத்தது.அடுத்து பென்மூர் தோட்டத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் 60க்கும் அதிகமான தொழிலாளர்கள் கலந்து கொண்டனர். பெ.கை.தொ.ச.பென்மூர் கிளையின் செயலாளர் தோழர். பீ.சிவனு தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பு.க.க.மத்திய குழு உறுப்பினர் எம்.அரவிந்தன், துமிந்த பீரிஸ் முதலான தோழர்கள் உரை நிகழ்த்தினர்.அரவிந்தன் தமது உரையில் இ.தொ.க. இந்த வேலைநிறுத்தத்தை பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கு எதிராக தோட்டத்துறையில் அபிவிருத்தி கண்டு வரும் கொதிப்பின் எதிரில் அரசாங்கத்தைக் காப்பாற்றுவதற்கே ஏற்பாடு செய்தனர். இ.தொ.க.வும் சமசமாஜ, கம்யூனிஸ்ட் தலைவர்களும் அரநுசாங்கத்துடன் சேர்ந்து கொண்டு இருப்பதுதொழிலாளர்கள் உரிமைகளை வென்றெடுப்பதைத் தவிர்ப்பதற்கே. இதை விளங்கிக் கொள்ள வேண்டும். தொழிலாளர்கள் சுயாதீனமான முறையில் புரட்சிக் கட்சியைச் சூழ அணிதிரண்டு முதலாளி வர்க்கத்தை தூக்கி வீசி அரச அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும். தனியார்மயத்தினால் தோட்டத் தொழிலாளர்களிடையே போஷாக்கின்மையும் நோய்களும் இறப்பு விகிதமும் உக்கிரம் கண்டுள்ளன. எமது சங்க அங்கத்தவரான பழனியம்மா புற்று நோயினால் 36 வயதில் காலமானார். டன்பார் தோட்டத்தில் 36 வயதுடைய இராணி என்ற இரு குழந்தைகளின் தாய் பிரசவத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட பலவீனத்தினால் மரணமானார்.ரூபா8 அறபசொற்ப சம்பள உயர்வுகளையும் கூட அரசாங்கம் வழங்க மறுத்துள்ளது.நாம் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச மாதச் சம்பளமாக ரூபா.5000 வேண்டும் என்கின்றோம். முதலாளித்துவ ஆட்சியைத் தூககி வீசுவது வாழ்வுக்கும் சாவுக்கும் இடைப்பட்ட பிரச்சினையாகி உள்ளது. அதற்கு ஒரு புரட்சிக் கட்சியைக் கட்டியெழுப்ப ஒன்றிணைவோம்.என்றார்.

இக்கூட்டதில் பேசிய துமின்த பீரிஸ் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் கீழ் தொடுக்கப்பட்டு வரும் இனவாத யுத்தத்தின் அர்த்தத்தை தெளிவுபடுத்தினார்.இந்த இனவாத யுத்தம் தமிழ் மக்களுக்கு மட்டும் எதிரானது அல்ல. இது முழு தொழிலாளர் வர்க்கத்துக்கும் எதிராகப் பயன்படுத்தப்படுகின்றது. அவசரகாலச் சட்டம் இன்று தொழிலாளர் வர்க்கத்துக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.தொழிலாளர் சம்பளத்தை ரூ.8 ஆல் அதிகரித்தாலும் பிரச்சினை தீர்ந்து போகாது. ஏற்கனவே பாண் மாவு விலை உயர்ந்துவிட்டது.பிரிவினைவாத விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் சமீபத்தில் மத்திய வங்கி கட்டிடத்துக்கு குண்டு வைத்தார்கள். இந்தப் பிற்போக்குத் தாக்குதலைப் பயன்படுத்தும் பொதுஜன முன்னணி அரசாங்கம் நாட்டை இராணுவமயப்படுத்தி வருகின்றனர். தற்சமயம் அவசரகாலச் சட்டம் விதிக்கப்பட்டுள்ளது. தொழிலாளர் வர்க்கப் போராட்டங்களையும் வேலைநிறுத்தங்களையும் முறியடிப்பது இதன் இலக்காகும். இதற்கு எதிராக வடக்கிலும் தெற்கிலும் உள்ள தொழிலாளர்கள் ஒன்றிணைந்து சோசலிச வேலைத் திட்டத்துக்காகப் போராட வேண்டும். ஏனைய சகல தொழிற்சங்கங்களும் தொழிலாளர்களைப் பிளவுபடுத்துகின்றன. நாம் தொழிலாளர் வர்க்கத்தை பாட்டாளி வர்க்க அனைத்துலகவாதத்தின் அடிப்படையில ஒன்றிணைக்கப்போராடுகின்றோம் என்றார்.

இதற்கிடையே அவசரகாலச் சட்ட விதிகள் உண்மையில் யாருககு எதிராக விதிக்கப்பட்டு உள்ளன என்பதற்கு நல்ல அனுபவம் கிடைத்தது. பெ.தோ.கை.தொ.ச.வேலைநிறுத்தத்தின் மத்தியில் 22ம் திகதிய வேலைநிறுத்தத்தினைப் பற்றி அட்டன் நகரசபை மண்டபத்தில் கூட்டம் நடாத்தவும் ஏற்பாடாகி இருந்தது. இதற்கு மண்டப அனுமதி கோரி கடிதம் ஒப்படைக்கப் பட்டிருந்தது. இதற்கு முன்னர் மண்டபம் நகரசபைத் தலைவரின் அனுமதியுடன் வழங்கப்பட்டு வந்தது. ஆனால இதத்டமை பொலிசாரின் அனுமதி வேண்டும் எனச் சுட்டிக் காட்டினர்.மண்டபத்தினுள் ஒலிபெருக்கி இல்லாமல் நடாத்தப்படும் கூட்டங்களுக்கு பொலிசாரின் அனுமதி வேண்டியதில்லை எனச் சுட்டிக் காட்டியபோது அவசரகாலச் சட்டத்துக்கும் தோட்ட வேலைநிறுத்தத்துக்கும் இடையே அத்தகைய கட்டளை அனுப்பப்பட்டு இருப்பதாக நகரசபை அதிகாரிகள் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து பொலிஸ் அதிகாரிகளை அணுகிய போது அத்தகைய அனுமதிக் கடிதம் வழங்க முடியாதெனவும் நகரசபை அதிகாரிகள் விரும்பினால் மண்டபத்தை வழங்க முடியும் எனவும் பொலிஸ் தலைமையக அதிகாரி தெரிவித்தார். எவ்வாறெனினும் பொலிஸ் அனுமதி பெற்றேயாக வேண்டும் என நகரசபைத் தலைவர் நின்றுகொண்டார். இந்தக் கயிறிழுப்பினால் கூட்டம் சிதறிப் போய்விட்டது.உண்மை என்னவெனில் துரோகத் தலைவர்கள் தோட்டத்துறை பூராவும் அனுஷ்டித்துவந்த மௌனத்தினை சிதறடித்துக் கொண்டு தொழிலாளர்களின் குரல் ஒலிக்கும் என அரசும் முதலாளிவர்க்கமும்அஞ்சியதேயாகும்.


சமசமாஜ,கம்யூனிஸ்ட்,இ.தொ.கா, ஜ.தொ.கா.தலைவர்கள் ஒரு கூட்டமோ அல்லது ஊர்வலமோ நடாத்தாது இருக்கப் பார்த்துக் கொண்டனர்.

10ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com

# இந்தியத் தேர்தலில் ட்றொட்ஸ்கிஸ்டுகள்



இந்திய சோ.தொ.க. தேர்தல் விஞ்ஞாபனம்

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் ஐக்கியம்பூண்ட இந்திய ட்ரொட்ஸ்கிசக் கட்சியான சோசலிசத் தொழிலாளர் கழகம் இந்தியப் பொதுத் தேர்தலில் ஒரு சோசலிசப் பதிலீட்டுக்காகப் போராட மூன்று வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது. ஜோற்றன் றோயும் கே. பழனியும் முறையே கல்கத்தாவிலும் வட சென்னையிலும் லோக் சபாவுக்குப் போட்டியிடுகின்றார்கள். எம்.கைலாசம் சென்னை-வில்லிவாக்கம் தொகுதியில் தமிழ்நாடு சட்டசபைக்குப் போட்டியிடுகின்றார்.

இந்தப் பொதுத் தேர்தல் சமூகத் துருவப்படுத்தலும் வேலையில்லாத் திண்டாட்டமும் உக்கிரம் கண்டுள்ள நிலையில் நடைபெறுகின்றது. கடந்த அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக இந்திய முதலாளித்துவத்தின் மைய ஆணியாக விளங்கிய காங்கிரஸ் கட்சி ஆழமான நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது. 74 வயது நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரஸ் கட்சி அரசாங்கத் துறைத் தொழில்களை வெட்டிச் சரித்துள்ளது. அரசுடமைக் கைத்தொழில்களை தனியார்மயமாக்கியுள்ளது. விவசாயிகளுக்கான அரசாங்க மானியங்களில் பெரும் வெட்டு இடம்பெற்றுள்ளது. இது இலட்சக் கணக்கான ஏழை விவசாயிகளை வறுமையினதும் பட்டினியினதும் கொடும் பிடிக்குள் தள்ளியுள்ளது.

பூகோளமயமான முதலாளித்துவ உற்பத்தியின் எதிரில் காங்கிரஸ் கட்சி அதன் பாரம்பரியமான தேசியவாத சுயபூர்த்திக் கொள்கைகளைக் கைவிட்டுள்ளது. பொருளாதாரத்தை ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்கள் சுரண்டுவதற்குத் திறந்துவிட்டுள்ளது. அவ்வாறே பல்வேறு ஸ்டாலினிசக் கட்சிகளும் தொழிற்சங்கங்களும் தொழில்களையும் வாழ்க்கை நிலைமைகளையும் ஒழிப்பதை அங்கீகரித்துள்ளன. சோசலிசத் தொழிலாளர் கழகம் அதனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் மூன்று முதலாளித்துவ முன்னணிகளையும்– காங்கிரஸ், பாரதீய ஜனதா கட்சி, தேசியவாத – இடதுசாரி முன்னணி—நிராகரிக்கும் படி கேட்டுக் கொண்டுள்ளது. இந்த தேசிய முன்னணி-இடதுசாரி முன்னணி எனப்படுவது ஸ்டாலினிஸ்டுகளுக்கும் பல்வேறு பிராந்தியக் கட்சிகளுக்கும் ஜனதாக் கட்சிக்கும் இடையேயான ஒரு கூட்டாகும்.

இந்தச் சகல கட்சிகளும் இந்தியாவில் இருந்து வரும் வறுமையை ஆதரிக்கின்றன. இந்தியாவில் எந்தக் கோஷ்டி அடுத்த அரசாங்கத்தை அமைத்தாலும் அது இந்தியத் தொழிலாளர் வர்க்கத்தின் மீது தாக்குதலை நடாத்துவது உறுதி.

### ஊழல்



பழனி



றோய்



கைலாசம்

இன்றைய பொதுத் தேர்தல் 115 அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் 43மில்லியன் ரூபாக்களை 1989க்கும் 1991க்கும் இடையே இலஞ்சமாகப் பெற்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஒரு நிலையில் நடைபெறுகின்றது. இதில் ஏழு காங்கிரஸ் அமைச்சர்கள், பாரதீய ஜனதாக் கட்சியின் சிரேட்ட புள்ளிகள் ஆகியோர் அடங்குவர். காங்கிரசின் போலியான ஆழமான எதிர்ப்பும் இந்திய பாராளுமன்ற அரசியல் முறையுடனான வெறுப்பும் பாரதீய ஜனதாக் கட்சியினாலும் மற்றும் இனவாதக் கட்சிகளினாலும் இந்து சோவினிச, பிரிவினைத் திசைகளில் திசை திருப்பப்பட்டுள்ளது.

சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் தேர்தல் விஞ்ஞாபனம் இந்த பிற்போக்கு அணிதிரள்விற்கு ஸ்டாலினிசக் கட்சிகளே முக்கிய காரணம் எனச் சுட்டிக் காட்டியுள்ளது. மேற்கு வங்காள மாநிலத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஜோதிபாசு தலைமையிலான ஒரு இடதுசாரி முன்னணி மூலம் ஆட்சி செலுத்துகின்றது. இவரே இன்றைய தேசிய முன்னணி-இடதுசாரி முன்னணியின் தலைவர். இவரது ஆட்சி தொழிலாளர்களுக்கு எதிராக முறைமுறையான தாக்குதல்களை நடாத்தி உள்ளது. இதனது புதிய 'கைத்தொழில்' கொள்கையின் கீழ் 28 அரச உடமை கைத்தொழில்கள் மூடப்பட்டுள்ளதோடு 140000 தொழிலாளர்கள் வேலைநீக்கம் செய்யபப்பட்டுள்ளனர். இந்திய தொழிற்சங்க சம்மேளனத்தின் உதவியுடன் ஜோதிபாசு அரசாங்கம் ரெலனிபாராவில் வேலைநிறுத்தம் செய்த சணல் ஆலைத் தொழிலாளர்களுக்கு எதிராக பொலிஸ் படையைத் திரட்டியது. வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட கோலார் தங்கச் சுரங்கத் தொழிலாளர்கள் இந்திய தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவர்களால் தாக்கப்பட்டனர். இதில் பொலிஸ் படையும் சேர்ந்து கொண்டது. ஜோதிபாசு தமது சமீபத்திய அமெரிக்க விஜயத்தின் போது இந்தியாவில் கடைப்பிடிக்கப்பட்டுவரும் பொருளாதாரச் சீர்திருத்தங்கள் அரசாங்க மாற்றத்தினால் பாதிக்கப்பட்டு விடாது என உத்தரவாதமளித்தார்.

சகல வகையறாவைச் சேர்ந்த தேசியவாதங்களையும் பிரிவினை வாதங்களையும் நிராகரிக்கையில் சோ.தொ.க. தேர்தல் விஞ்ஞாபனம் கூறுவதாவது: ...சோசலிசத் தொழிலாளர் கழகம் அனைத்துவிதமான தேசியவாதத்தையும் பிரிவினை வாதத்தையும் நிராகரிக்கின்றது. இந்தியாவிலுள்ள தொழிலாளர்களுக்கும் சர்வதேச ரீதியாக உள்ள அவர்களது வர்க்க சகோதரர்களுக்கு இடையிலும் இந்தியாவினுள் இந்து, முஸ்லீம், கிறிஸ்தவ மற்றும் பல்வேறு மொழிகள் பேசும் தொழிலாளர்களுக்கு இடையிலும் பகைமையை தூண்டிவிடும் அனைத்து முயற்சிகளையும் எதிர்க்கின்றது.

“பாகிஸ்தான், நேபாளம், இலங்கை போன்ற அண்டை நாடுகளில் இருந்து இந்தியாவுக்கு வந்துள்ள அகதிகள். குடிபெயர்ந்த தொழிலாளர்களை திருப்பி அனுப்ப வேண்டுமென்று நடாத்தப்படும் தேசியவெறிப் பிரச்சாரத்தை சோசலிசத் தொழிலாளர் கழகம் வன்மையாக எதிர்க்கின்றது.”

காங்கிரஸ் ஆட்சிக்கு எதிரான முன்னோக்கு இலாப முறையை ஒழிக்கும் ஒரு தொழிலாளர் – விவசாயிகள் அரசாங்கத்தை அமைக்கும் சோசலிச வேலைத் திட்டத்துக்கான ஒரு போராட்டத்தின் மூலம் மட்டுமே அபிவிருத்தி செய்யப்பட முடியும். சோ.தொ.க. வேட்பாளர்கள் 'கைத்தொழில்', 'விவசாயத்' தொழிலாளர்களுக்கும் ஏழை விவசாயிகளுக்கும் இடையே ஒரு புரட்சிகரக் கூட்டுக்கு அழைப்பு விடுக்கின்றனர். அதன் மூலம் சமூக சமத்துவத்துக்கும் அனைத்து ஜனநாயக உரிமைகளின் பாதுகாப்புக்கும் போராட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளனர்.

கட்சியின் வேலைத்திட்டம் கண்ணியமான தொழில், வீட்டு வசதி, சகலருக்கும் கல்வி, சுகாதார வசதி, சகல அரசியல் கைதிகளுக்கும் விடுதலை, மரண தண்டனையை ஒழித்தல், மகளிருக்கு எதிரான சகல பாகுபாடுகளையும் ஒழித்தல், வெளிநாட்டு தொழிலாளருக்கும் அகதிகளுக்கும் எதிராக நெறிப்படுத்தப்பட்டுள்ள சகல சட்டங்களையும் நீக்குதல் என்பவற்றை உள்ளடக்கிக் கொண்டுள்ளது.

சோ.தொ.க. மதச் சிறுபான்மையினருக்கு எதிரான சகல அரச இடர்ப்பாடுகளுக்கும் முடிவு கட்டும்படியும் காஷ்மீர், பஞ்சாப் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் இருந்து இந்திய இராணுவத்தை நிபந்தனையின்றி உடனடியாக வாபஸ் பெறும்படியும் கோருகின்றது.

தேசிய ஒடுக்குமுறைக்கு முதலாளித்துவத்தை ஒழித்துக் கட்ட நடாத்தும் ஒரு போராட்டத்தின் மூலமே முடிவு கட்டமுடியும் என்பதை அங்கீகரிப்பதின் அடிப்படையில் சோ.தொ.க.வேட்பாளர்கள் இந்திய முதலாளித்துவ அரசையும் பிரிவினைவாதத்தையும் எதிர்க்கிறார்கள். அவர்கள் ஒரு இந்தியத் துணைக்கண்ட ஐக்கிய சோசலிஸ அரசை அமைக்கப் போராடுகின்றார்கள்.

# மத்திய கிழக்கில் கண்மூடித்தனமான தேசியவாதம்

தெற்கு லெபனானில் இஸ்ரேலின் புதிய இராணுவ நடவடிக்கைகள், மத்திய கிழக்கைத் துண்டாடுவதில் ஒரு புதிய இரத்தம் தோய்ந்த அத்தியாயத்தைக் குறித்து நிற்கின்றது. ஏப்பிரல் 10ம் திகதி ஆரம்பமான இந்தக் குண்டு வீச்சில் 160க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர். இது 1993 செப்டம்பரில் அமெரிக்காவின் தரகு வேலையுடன் இஸ்ரேலுக்கும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கும் இடையே ஆரம்பமான சமாதான போக்கின் முக்கிய இலட்சணத்தைக் காட்டிக் கொண்டுள்ளது.

இது சமாதானக் காலப்பகுதிக்கும் செழிப்புக்கும் கட்டியம் கூறுவதற்கு மாறாக இப்பிராந்தியத்தின் அரசியல் பொருளாதாரத்தை இரும்புப் பிடிக்குள் கொணரும் போராட்டத்தை பறைசாற்றிக் கொண்டுள்ளது. இப்போராட்டம் பெரும் வல்லரசுகள்-குறிப்பாக அமெரிக்கா, பிரான்ஸ், இஸ்ரேலிலும் லெபனானிலும் சிரியாவிலும் உள்ள உள்ளூர் முதலாளித்துவ ஆட்சியாளர்கள், முதலாளித்துவ தேசியவாத இயக்கங்களான பி.எல்.ஓ., ஹிஸ்புல்லா-என்பவற்றை உள்ளடக்கிக் கொண்டுள்ளது.

இஸ்ரேலிய குடிசன இலக்குகள் மீதான ஹிஸ்புல்லா றொக்கற் தாக்குதல்கள் சிரியாவின் கட்டளையின் மீதே நடாத்தப்பட்டது. ஹபாஸ் அசாத் ஆட்சியாளர்கள், இந்தத் தாக்குதல்களை மத்திய கிழக்கு தீர்வுகளில் டமாஸ்கஸின் நலன்களையும் உள்ளடக்கிக் கொள்ளுமாறு வாஷிங்டனையும் இஸ்ரேலையும் நெருக்கும் பொருட்டே நடாத்தினர்.

இஸ்ரேலிய அரசு வாஷிங்டனின் ஆதரவுடன் தனது ஆக்கிரமிப்புக்கு எதிரான பிரமாண்டமான பொதுஜன கிளர்ச்சியை வன்முறை மூலம் நசுக்கித் தள்ளிவிட முயன்றது. ஹிஸ்புல்லாவுக்கு சிரியா, ஈரானிடமிருந்து கிடைத்து வந்த ஆதரவை வெட்டித் தள்ளிவிடவும் முயன்றது.

அமெரிக்க – இஸ்ரேலிய தாக்குதலின் பின்னணியில் திட்டவட்டமான பொருளாதார நலன்களும் இருந்து கொண்டுள்ளன. இஸ்ரேல் லெபனான் மத்திய கிழக்கில் ஒரு போட்டி வங்கி,வர்த்தக மையமாகப் புத்துயிர் பெறுவதைக் காண விரும்பவில்லை. மேலும் இஸ்ரேலும் அமெரிக்காவும் லெபனானில் பிரான்சின் அதிகரித்த அரசியல், பொருளாதாரத் தலையீட்டையிட்டுக் கவலை கொண்டுள்ளன. இஸ்ரேலின் திடீர்த் தாக்குதல்கள் லெபனானின் அடிக் கட்டுமானத்துக்கு கோடிக் கணக்கான டாலர்கள் சேதத்தை உண்டுபண்ணவும் அதேசமயம் அப்பிராந்தியத்தில் அமெரிக்க, இஸ்ரேலிய மேலாதிக்கத்தை மீள உறுதி செய்யவும் உதவியுள்ளது.

குண்டுவீச்சு நிறுத்தப்பட்டதற்குக் காரணம், சைமன் பெரஸ் அரசாங்கத்தின் மீது அது பாதகமான தாக்கங்களை ஏற்படுத்தியதேயாகும். குறிப்பாக கனாவில் உள்ள ஐ.நா.தளத்தில் 100க்கும் அதிகமான அகதிகள் கொல்லப்பட்டதன் பின்னர் இந்நிலைமை ஏற்பட்டது. மே 29 தேர்தல்களில் தனது அரசாங்கத்தின் வாய்ப்புக்களை அதிகரித்துக் கொள்ளலாம் என்ற பெரஸின் நம்பிக்கை, ஹிஸ்புல்லா தாக்குதல்களை நிறுத்த அந்த இராணுவ நடவடிக்கைகள் தவறியதைத் தொடர்ந்து வீழ்ச்சிகண்டது.

கிளின்ரன் அரசாங்கம் சிரியாவின் அசாத்துடன் ஒரு யுத்த நிறுத்தத்துக்குப் பேரம் பேசுவதன் மூலம் பெரஸை பிணையெடுக்கத் தள்ளப்பட்டது. ஆனால் இந்த கொடுக்கல் வாங்கல்கள் இந்தப் பிராந்தியத்திலான மேலாதிக்கத்துக்கான போராட்டத்தினை மேலும் உக்கிரமடைய

9ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com

# வடக்கில் இராணுவ ஆட்சிக்காக திவயின பிரச்சாரம்

வடமாகாண பொது மக்களின் கோரிக்கையாகக் காட்டி யாழ்ப்பாணக் குடாநாட்டில்இராணுவ ஆட்சியை ஸ்தாபிதம் செய்யும் பிரச்சாரத்தில் திவயின பத்திரிகைகாரர்கள் இறங்கியுள்ளனர். வடக்கே இராணுவ நிர்வாகத்தை உருவாக்கு! என்ற தலைப்பின் கீழ் 1996 மே 12 ந்திகதிய ஞாயிறு பத்திரிகை முதல் பக்க தலைப்புச் செய்தியில் பின்வருமாறு குறிப்பிட்டது.

"யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழும் பொது மக்கள் அங்கு இராணுவ நிர்வாகத்தை ஏற்படுத்துமாறு அதிகாரிகளுக்கு கோரிக்கைகளை முன் வைத்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது."

தமிழர் எதிர்ப்பு இனவாத யுத்தத்தினால் தமிழ் பொது மக்கள் கடந்த 14 வருடங்களாகவும் இன்றும் முகம் கொடுத்துள்ள மரணம், தொற்று நோய்கள், பட்டினி, இடம்பெயர்வுகள் முதலான அவஸ்தைகள் பற்றி எதுவிதமான அறிக்கையும் கிடைக்கப்பெறாத திவயின பத்திரிகைகாரர்களுக்கு வடக்கில் இராணுவ நிர்வாகத்தைப் பற்றிய பொதுமக்களின் கோரிக்கை எதுவித குறைச்சலும் இல்லாமல் கிடைத்துள்ளது!

பதின்மூன்று வருடங்களாக முன்னெடுக்கப்படும் இனவாத யுத்தத்தின் இரத்தம் தோய்ந்த அனுபவங்களைப் பெற்றுள்ள வடமாகாண மக்கள் மட்டுமன்றி தெற்கின் எந்தவொரு தொழிலாளியும் திவயின பத்திரிகைகாரர்களின் மோசடிகளால் ஏமாந்துவிடக் கூடாது. இந்த பிரச்சாரத்தில் பொதிந்து போயுள்ள வடக்கு-தெற்கு தொழிலாளர்-ஒடுக்தப்படும் மக்களுக்கு எதிரான ஆபத்துக்களை குறைத்து மதிப்பிட்டுவிடக் கூடாது.

இதற்கிடையே "சிந்தனை வட்டம்" என்ற பாசிசக் கும்பலும் மற்றும் அமைப்புக்களும் வடக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்றாதே! வடக்கில் இராணுவ ஆட்சியை தொடாந்து வைத்திரு! கைப்பற்றிய பகுதிகளில் சிங்கள மக்களை குடியமர்த்து! முதலான இராணுவ ஆட்சியை நிறுவுவதற்கான பிரச்சாரங்களில் ஈடுபட்டுள்ளன. இதன் ஒரு பாகமாக கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் சுவரொட்டி பிரச்சாரம் இடம்பெற்று வருகின்றது.

திவயினவும் பாசிசக் கும்பல்களும் வடக்கில் இராணுவ ஆட்சியை நிறுவும் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருப்பது பொதுஜன முன்னணி அரசாங்கம் இனவாத யுத்தத்தை உக்கிரமாக்கிக் கொண்டும் வட்க்கு-கிழக்கை இராணுவ பிடியின் கீழ்க் கொண்டு வந்துள்ள நிலையிலும் முழு நாட்டிலும் இராணுவ சர்வாதிகாரத்தை திணிக்கும் திட்டங்கள் விரைவுபடுத்தப்பட்டு வரும் நிலையிலுமாகும்.

ரிவிரச-1,2,3 ன் கீழ் இடம்பெற்ற மாபெரும் இராணுவ நடவடிக்கைகளின் மூலம் மே 16ம் திகதி யாழ்ப்பாணக் குடா நாடு அரச படைகளின் பிடியின் கீழ்க் கொணரப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

பிரிவினைவாத விடுதலைப் புலிகளுக்கு இராணுவ ரீதியிலான தோல்வியை ஏற்படுத்தி யாழ்ப்பாணக் குடாநாட்டினை தமது பிடியின் கீழ்க் கொணர்ந்த போதிலும் தமிழ் மக்களை தமது பிடியின் கீழ்க் கொணர முடியவில்லை என்பதை பொதுஜன முன்னணி உள்ளடங்கலான் முதலாளிதத்துவ ஆளும் வர்கக்ம் நன்கு அறியும். அது மட்டும்ன்றி பிரிவினைவாத விடுதலைப் புலிகள் உள்ளடங்கலான தமிழ் முதலாளித்துவ அமைப்புக்களின் அரசியல் வங்குரோத்தும் பிற்போக்கும் தமிழ் பொதுமக்களின் எதிரில் அம்பலமாகியுள்ளது. இந்நிலையில் இனவாத யுத்தத்துக்கும் தேசிய ஒடுக்குமுறைக்கும் எதிராக தமிழ் முதலாளிதுவ அமைப்புக்களில் இருந்து சுயாதீனமாக அரசியல் ஈர்ப்பு உருவாகும் நிலைமைகள் தமிழ் மக்களிடையே வளர்ச்சி கண்டு வருகின்றது. இது எல்லாவற்றையும் விட முதலாளி வர்க்கத்தை கிலியடையச் செய்துள்ள ஒரு காரணியாகும். சிறப்பாக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் முன்வைக்கும் அனைத்துலக சோசலிசத்துகக்ான வேல்லைத்திட்டத்தின் அடிப்படையில் தமிழ் மக்கள் அணிதிரளும் ஆபத்தையிட்டு ஆளும் வர்க்கம் கலக்கம் அடைந்துள்ளது.

ஆதலால் வடக்கு- கிழக்கில் திணிக்கத் திட்டமிடும் இராணுவ நிர்வாகத்துடன் சேர்ந்து, அப்பகுதி மக்களின் அரசியல் செயற்பாட்டை நசுக்கவும் ஆளும் வர்கக்ம் தீர்மானம் செய்துள்ள்து. திவயினவின் பின்வரும் செய்தி அதை ஊர்ஜிதம்செய்கின்றது:

"தற்சமயம் கொழும்பில் உள்ள வடக்கின் அரசியல் கட்சிகளின் தலைவ்ர்கள் 'மீண்டும் இராணுவ அதிகாரம் ஸ்தாபிதமானபகுதிகளிற்கு சென்று அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பது பற்றி யோசிப்பது தொடர்பாக யாழ்ப்பாண பொது மக்க்ள் அதிருப்தி தெரிவித்துள்ளன்ர்." என திவயின பத்திரிகைகாரர்கள் தெரிவித்துள்ளனர். ஆனால் அரசியல் கட்சிகளின் தொழிற்பாட்டை வடகக்ில் தடை செய்வது பொது மக்களின் கோரிக்கை அல்ல. இது பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் தீர்மானம் ஆகும் என்பதை மே 17ம் திகதிய திவயின பத்திரிகையின் செய்தி ஊர்ஜிதம் செய்கின்றது. "வடக்கில் அலுவலகம் முடியாது... நடமாட்டம் முடியாது!! என்ற தலைப்பின் கீழ் பிரசுரிக்கப்பட்ட செய்தியின்படி புளொட், ஈபீஆர்எல்எப், டெலோ, ஈபீடீபி அமைப்புக்கள் நான்கும் வடக்கில் அலுவலகங்கள் திறப்பதும் அங்கு விஜயம் செய்வதும் தடை செய்யப்பட்டுள்ளது. இந்த அமைப்புக்கள் 1987 இந்திய - இலங்கை உடன்படிக்கையின் பின்னர் யூ.என்.பி.- பொதுஜன முன்னணி அரசாங்கங்களின் இனவாத யுத்தத்துக்கு முண்டு கொடுத்தவை என்பது குறிபப்ிடத்தக்கது. அந்த விதத்தில இந்த அமைப்புக்களுக்கு எதிராக தடைவிதிக்கும் சாட்டில் பொதுஜன முன்னணியின் தடை, உண்மையில் வடமாகாண பொது ஜனங்களின் அரசியல் செயற்பாட்டுக்கு எதிராகவே விதிக்கப்படுகின்றது.



பாரிஸ் நகரில் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைப் பகுதியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் வெளிநாட்டுக் கிளையின் அங்கத்தினர்கள் மீது கடந்த மார்ச் 13ம் திகதி வலதுசாரி பிரிவினைவாதிகளான தமிழீழ விடுதலைப் புலிகள் நடாத்திய குண்டர் தாக்குதலைக் கண்டித்து புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் ஏப்பிரல் 9 ம் திகதி நடாத்திய கண்டனக் கூட்டத்தில் பு.க.க.பொதுச் செயலாளர் தோழர்.விஜே டயஸ் பேசுவதை இங்கே காண்கிறீர்கள் கொழும்பு அரசாங்க லிகிதர் சேவைச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு பு.க.க.மத்திய குழு உறுப்பினர் டபிள்யூ.கே.சனில் தலைமை தாங்கினார்.தோழர்.விஜே டயஸின் பேச்சின் முழு விபரம் அடுத்த தொழிலாளர் பாதையில் வெளிவரும்.



1996 நவம்பர் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் சோசலிச சமத்துவக் கட்சி வேட்பாள்ராக நிற்கும் ஜெறி வைட் மிச்சிக்கன் பல்கலைக் கழக மாணவர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்த கட்டம்


வாசியுங்கள்!




இலங்கையில் மார்க்சிச பாரம்பரியங்களுக்கான போராட்ட வரலாற்றை சித்தரிக்கும் நூல்

கீர்த்தி பாலசூரிய எழுதியது

விலை ரூபா. 20/-

தொடர்பு:
90 1 வது மாளிகாகந்த ஒழுங்கை,
மருதானை, கொழும்பு-10.


படிப்பகம்

www.padippakam.com

# இந்திய தேர்தல் முடிவுகள்:

(1ம் பக்கம் தொடர்ச்சி)

முண்டுகோலை தேடிக் கொள்ள வேண்டும். அரசாங்கத்தை அமைத்துக் கொண்டுள்ள பீ.ஜே.பீ.க்கு முழு வாக்காளர் எண்ணிக்கையில் நூற்றுக்கு 20 வீதம் மட்டுமே கிடைத்துள்ளது.

தேசிய முன்னணி-இடது முன்னணி முதலாளித்துவக் கூட்டுக்கு117 ஆசனங்கள் கிடைத்துள்ளது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி என்ற ஸ்டாலினிசக் கட்சிகள் இந்த முதலாளித்துவ கூட்டின் இடதுசாரி முன்னணியில் உள்ளன. இம்முன்னணிகள் இன்று மக்களால் தோற்கடிக்கப்பட்ட காங்கிரஸ் கட்சியின் முண்டுகோலுடன் ஒரு அரசாங்கத்தை அமைக்க முயற்சிக்கின்றனர். முதலில் இக்கூட்டின் சீ.பீ.எம் தலைவரான ஜோதி பாசுவை பிரதமர் பதவியில் இருத்தி முதலாளிதத்துவ ஆட்சியின் பொறுப்பை ஏற்க எண்ணிய போதிலும் நெருக்கடியின் ஆழம் காரணமாக இத்தருணத்தில் நேரடியாக ஆட்சி அதிகாரத்துக்கு தோள் கொடுக்காமல் கர்நாடகத்தின் முதலாளித்துவ ஜனதா தளத்தின் தலைவர் தேவ கவுடாவுக்கு பிரதமர் பதவியைக் கையளிக்க எண்ணப்பட்டுள்ளது.

பீ.ஜே.பீ-சிவசேனா கூட்டரசாங்கம் தமக்கு லோக் சபாவில் பெரும்பான்மை இருப்பதை நிரூபிக்கமே 31ம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இதன்பேரில் கட்சிகள், கூட்டுக்கள், சுயேட்சைக் குழுக்களின் அங்கத்தவர்களை விலைக்கு வாங்கும் இயக்கம் திரைக்குப் பின்னால் நடைபெற்று வருகின்றது. இதில் வாக்குக்களைக் கறந்து கொள்ள முடியாது போனால் இரண்டு கிழமை வயதான பீ.ஜே.பீ.-சிவசேனா அரசாங்கம் வீழ்ச்சிகாணும். இதன் பின்னர் தேசிய முன்னணி – இடது முன்னணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் முன்னைய முன்னணியைப் போலவே இதுவும் இழுபறி முதலாளித்துவ குழுக்களின் ஒரு முன்னணியாதலால் இதன் ஆயுளும் சொற்பம். ஸ்டாலினிஸ்டுகளைக் கொண்ட அத்தகைய ஒரு அரசாங்கத்தை தற்காலிகமாக ஆட்சியில் வைத்திருப்பது என்பது தொழிலாளர்கள்-ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக தாக்குதல் நடாத்த அதைப் பயன்படுத்த முதலாளித்துவ வர்க்கம் எடுக்கும் தீர்மானத்திலேயே அது தங்கியுள்ளது.

இந்தியப் பொதுத் தேர்தலில் நூற்றுக்கு 60 வீதத்தினரே வாக்களித்துள்ளனர். இது வழக்கமான ஒரு போக்கு அல்ல. இது முதலாளிதத்துவ ஆட்சி தொடர்பாக பொதுமக்களிடையே வளர்ச்சி கண்டு வரும் வெறுப்பினை எடுத்துக் காட்டுகின்றது. எந்த ஒரு கட்சிக்கும் மக்கள் அடிப்படை இல்லாமல் -ஒரு அரசாங்கத்தை அமைக்கும் அளவுக்கு பெரும்பான்மையிலான ஆசனங்கள் கிடைக்காமை காங்கிரஸ் கட்சி நடாத்திய ஏகாதிபத்தியச் சார்பு ஆட்சி முறை தொடர்பாக பொதுஜன

எதிர்ப்பும் அவ்வாறே இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் ஏகாதிபத்தியவாதிகள் இந்தியாவில் திணித்த அரசியல் அமைப்பு தொடர்பாக மக்களின் நம்பிக்கையீனமும் எதிர்ப்பும் வளர்ச்சி கண்டு வருவதைச் சுட்டிக் காட்டுகின்றது.

111 ஆண்டுகள் வயதுகள் படைத்த இந்திய தேசிய காங்கிரஸ் வீழ்ச்சி கண்டமை முன்னொருபோதும் இல்லாத ஒரு நிலைமையாகும். 1947ம் ஆண்டின் சுதந்திரம் எனப்படுவதன் பின்னர் 4 ஆண்டுகள் தவிர்ந்த முழுக் காலத்யையும் ஆட்சி செய்தது இந்திய காங்கிரஸ் கட்சியேயாகும். இந்திய முதலாளி வர்க்கத்தின் இக்கட்சி பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் போதும் அதன் பின்னரும் 1950களிலும் 1960களிலும் ஏகாதிபத்திய உலக அமைப்பினுள் பொதுமக்களை கட்டுப்படுததி வைக்கும் முக்கிய ஏகாதிபத்திய உபகரணமாக விளங்கியது. இக்கட்சி 1975ல்-இந்திரா காந்தி காலத்தில் தோல்வி கண்டது. அந்த தோல்வி காங்கிரஸ் நாற்றமெடுப்பின் ஒரு கட்டமாக இருந்த போதிலும் இன்று நரசிம்மராவ் அரசாங்கத்தின் தோல்வி முற்றிலும் அதற்குச் சமானமானதல்ல.


நரசிம்ம ராவ்


தேவ கவுடா


ஜோதி பாசு


வாஜ்பாய்

நரசிம்மராவ் அரசாங்கத்தின் தோல்வியும் அனைத்துக் கட்சிகளதும் நெருக்கடியின் பின்னாலும் உள்ளவை இந்தியாவிலுள் கட்டவிழ்க்கப்பட்டுள்ள உலகப் பொருளாதாரத்தின் பூகோளமயத்துடன் ஒன்றிணைந்து கொள்ளும் வேலைத் திட்டத்தினால் வர்க்க உறவுகளில் ஏற்பட்டுள்ள பிரமாண்டமான மாற்றமாகும். காங்கிரசின் வீழ்ச்சியானது யுத்தத்தின் பின்னைய பொருளாதார, அரசியல் உறவுகள் பூகோளரீதியில் வீழ்ச்சி கண்டதைக் குறித்து நிற்கின்றது.

ஏகாதிபத்தியத்தின் கீழ் இடம் பெற்றுவரும் பூகோளமயத்துடன் இணைந்து கொள்ளும் பொருட்டு ராவோ, அரசாங்கம் வெளிநாட்டு முதலீடுகளுக்கு இந்தியாவை திறந்துவிடவும் அரசாங்கத் துறையை கரைத்துவிடவும் ஆரம்பித்தது. இந்தியத் தேசியக் கைத்தொழில்கள்

வெளிநாட்டு முதலீடும் இறக்குமதியும் பெருக்கெடுத்து வரும் நிலையில் அடியுண்டு போயிற்று. தொழிலாளர்களுக்கும் விவசாயிகள் உட்பட்ட ஒடுக்கப்படும் மக்களுக்கும் கிடைத்து வந்த உதவிமானிய வெட்டு ஆரம்பமாகியது. கடந்த நான்கு ஆண்டுகளுள் இடம்பெற்ற பொருளாதார மறுசீரமைப்பின் கீழ் ஒழிக்கப்பட்ட தொழில்களின் எண்ணிக்கை ஒரு கோடியெனக் கணக்கிடப்பட்டுள்ளது. வேலையற்றோர் எண்ணிக்கை 10 கோடிக்கு அதிகமெனக் கணக்கிடப்பட்டுள்ளது. முதலாளிகள் ஏகாதிபத்தியக் கம்பனிகளுடன் சேர்ந்து கோடிக்கணக்கான ரூபாக்களை கமிஷனாகச் சுருட்டிக் கொள்கிறார்கள். நாட்டினுள் உயர்ந்த வருமானம் பெறும் நூற்றுக்குப் 10 வீதத்தினர் நாட்டின் முழு வருமானத்தின் நூற்றுக்கு 90 வீதத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு இருக்கும் அளவுக்கு சமூகத் துருவப்படுத்தல் உக்கிரம் கண்டுள்ளது. கடந்த நான்கு வருடங்களுள் இந்தியாவின் உத்தியோகபூர்வமான வறுமை வீதம் சனத்தொகையின் 36 வீதத்தில் இருந்து 48 வீதமாக உயர்ந்துள்ளது. பூகோளமயமாக்கலின் ஒரு வெளிப்பாடாக இந்தியா முழுவதும் குழந்தை உழைப்பு எண்ணிக்கை 4 கோடிகளைத் தாண்டியுள்ளது. இந்தியா சமூக ரீதியில் இரண்டு நாடாக பிளவுண்டு போயுள்ளது: அதாவது-முதலாளிகளின் இந்தியா, தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் இந்தியா.

## தொழிலாளர்-ஒடுக்கப்ப்டும் மக்களின் பயணம்.

இந்திய பொதுத் தேர்தல் முடிவுகள் ஏகாதிபத்தியவாதிகளதும் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளிகளதும் தாக்குதல்களுக்கு எதிராக தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் மேற்கொண்டுள்ள பயணத்தை எடுத்துக் காட்டுகின்றது. எனினும் இந்தியாவின் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் தாம் முகம் கொடுக்கும் ஆபத்துக்களைப் புரிந்து கொண்டாக வேண்டும். தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் முதலாளி வர்க்கத்தின் தாக்குதல்களுக்கு முகம் கொடுக்க பதிலீடு இல்லாமல் செய்யப்பட்டுள்ள ஒரு நிலலைமையில் இதன் இலாபத்தை பிற்போக்காளர்கள் சுரண்டிக் கொள்கிறார்கள். பீ.ஜே.பீ-சிவசேனா கூட்டு நொண்டி அரசாங்கம் அமைக்கும் அளவுக்கு ஆசனங்களைப் பெற்றுக் கொண்டுள்ளது.

அவர்கள் மக்களின் குழப்பநிலையை மதவாதம், இனவாதம் போன்றவற்றைப் பயன்படுத்திச் சூறையாடிக் கொள்கிறார்கள். பாசிச சக்திகளைப் பயன்படுத்திக் கொள்ளுவதன் மூலம் தொழிலாளர் வர்க்கத்தைத் திருப்பித் தாக்கத் தயாராகி வருகின்றார்கள். இந்திய ஆளும் வர்க்கத்தின் நீண்ட காலக் கருவியான காங்கிரஸ் கட்சி பொருளாதார பூகோளமயமாக்கத்தின் எதிரில் சிதறுண்டு போகத் தொடங்கியுள்ளது. இது ஆளும் வர்க்கம் தமது ஏகாதிபத்திய அவசியங்களின் பேரில் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களை நிர்வகிக்க பெரிதும் வலதுசாரி இராணுவ-பாசிச அமைப்புக்களை கட்டி எழுப்பும் திசையில் வேகமாகத் தள்ளப்பட்டுள்ளதைக் காட்டிக் கொண்டுள்ளது. இந்தியாவினுள் வளர்ச்சி கண்டுள்ள நெருக்கடி இந்தியத் துணைக் கண்டத்தின் சகல நாடுகளின் உள்ளும் வளர்ச்சி கண்டுள்ள நிலைமைகளுடன் இணைந்து கொண்டுள்ளது. இந்நெருக்கடியின் தாற்பரியங்களை விளக்கித் தீர்வுக்கான முன்னோக்கினை நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் ஐக்கியம் பூண்ட சோசலிசத் தொழிலாளர் கழகம் மட்டுமே முன் வைத்துள்ளது. நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் சோ.தொ.க. மட்டுமே இந்திய துணைக் கண்ட சோசலிசக் குடியரசை அமைக்கும் மாற்று வேலைத் திட்டத்தின் கீழ் மூன்று வேட்பாளர்களை நிறுத்தியது. (விபரம் 7ம் பக்கம்)

# மத்திய கிழக்கில் ....

7ம் பக்கம் தொடர்ச்சி)

மட்டுமே செய்தது. போர்நிறுத்தம் ஏற்றுக் கொள்ளப்பட்டதுதான் தாமதம் பெரஸ் வாஷிங்டனுக்குப் பயணமானார். அங்கு அவருக்கு இராணுவ உதவிகளுக்கு புதிய வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. லெபனான் மீதான தாக்குதல் மத்திய கிழக்கில் தேசியவாதத்தின் மரண அவஸ்தையைக் காட்டிக் கொண்டுள்ளது. இஸ்ரேலின் மனிதப் படுகொலைகளின் உச்சக் கட்டத்தில் யசீர் அரபாத்தின் பீ.எல்.ஓ. தலைமை, பெரஸ் அரசாங்கத்துடன் ஐக்கியப்பட்டு நின்றது. இயக்கத்தின் சாசனங்களில் இருந்து இஸ்ரேலை ஒழித்துக்கட்டக் கோரும் சரத்துக்களை நீக்குவதற்குப் பெருவாரியாக வாக்களித்தது. இதற்குப் பதிலுபகாரமாக பெரஸ் இஸ்ரேலிய தொழிற் கட்சியின் ஒரு வாக்கினால் ஒரு பாலஸ்தீன அரசினை நிறுவுவதை நிறைவேற்றியது.

லெபனான் மீதான தாக்குதலில் பீ.எல்.ஓ.வின் குழப்பம் அத்தகைய அரசின் வர்க்கத் தன்மைக்கு ஒரு எச்சரிக்கையாகும். இது அமெரிக்க, இஸ்ரேலிய திட்டங்களில் இடம் பிடித்துக் கொள்ளும் பாலஸ்தீனிய செல்வந்தர்களின் அக்கறையையும் ஆர்வத்தையும் எடுத்துக்காட்டுகின்றது. மேற்கு கரையிலும் காஸாவிலும் உள்ள தொழிலாளர்க்ளும் இளைஞர்களும் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பின் போது முகம் கொடுத்த அதே வறுமைக்கும் சுரண்டலுக்கும் பாலஸ்தீனிய நிர்வாகத்தின் கீழும் முகம் கொடுப்பர்.

சிரியாவிலும் ஈரானிலும் உள்ள போஷகர்களின் ஆதரவைப் பெற்றுள்ள ஹிஸ்புல்லா அடிப்படைவாதிகள் வெகுஜனங்களுக்கு எந்தவிதமான பதிலீட்டையும் வழங்குவதாக இல்லை. பீ.எல்.ஓ.தலைமையைப் போலவே இவர்களும் ஒரு முதலாளித்துவ விருப்புக்களையே பிரதிநிதித்துவம் செய்கின்றனர். இஸ்ரேலுக்கு அடிபணியும் பீ.எல்.ஓ.வின் உதாரணத்தைப் பின்பற்றவும் தென்-லெபனானில் ஒரு குட்டி அரசை அமைக்கவும் இயக்கத்தின் விருப்பை குறைந்தபட்சம் ஒரு ஹிஸ்புல்லா தலைவராவது வெளிப்படுத்தி உள்ளார். அத்தகைய சிடுமூஞ்சித் தனமான நடவடிக்கைகள் தென்-லெபனான் பிணங்களின் மீதும் அழிபாடுகள் மீதும் அமுல் செய்யப்ப்டுகின்றன. இவை தொழிலாளர் வர்க்கத்தை பிரிக்கவும் அதனை ஏதோ ஒரு முதலாளித்துவ ஆட்சியாளர்களின் நலன்களுக்கு கீழ்ப்படுத்தவும் முயற்சிக்கின்றன.

மத்திய கிழக்கில் முடிவற்ற இரத்தக் களரிக்கு முற்றுப் புள்ளி வைக்க ஒரேயொரு வழியே உள்ளது. வெகுஜனங்களின் பொது நலன்களின் அடிப்படையில் - அராபியர்களும் யூதர்களும் ஒன்றுபோல் தம்மை ஏகாதிபத்திய ஒடுக்குமுறையில் இருந்தும் முதலாளித்துவச் சுரண்டலில் இருந்தும் விடுதலை செய்து கொள்ள- ஓரு புதிய முன்னோக்கு உடனடித் தேவையாகியுள்ளது. இதனை முதலாளித்துவத்தை தூக்கிவீசி ,பிராந்தியத்தை கூறுபோடும் பிற்போக்கு முதலாளித்துவ அரச முறைக்கு முடிவுகட்ட மத்திய கிழக்கு பூராவும் உள்ள தொழிலாளர் வர்க்க்த்தை ஒரு சோசலிச, அனைத்துலகவாத வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஐக்கியப்படுத்துவதன் மூலமே சாதிக்க முடியும்.

www.padippakam.com

# சமசமாஜ கருங்காலி ஊர்வலத்தைக் கண்டனம் செய்வோம்!

லங்கா சமசமாஜக் கட்சியினர் தம்மையும் பங்காளிகளாகக் கொண்ட பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் மே தின ஊர்வலத் தடையையும் தாண்டித் தாமும் ஊர்வலம் நடாத்தியதாக முதலாளித்துவத் தொடர்புச் சாதனங்களில் வம்புப் பொய்களைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளனர். பொதுச் செயலாளர் பற்றி வீரக்கோன், அத்தாவுத செனவிரத்ன, வாசுதேவ நாணயக்கார முதலான சமசமாஜ தலைவர்கள் கைகோர்த்து பொலிஸ் பாதுகாப்புடனும் வழிநடாத்தலுடனும் கோழை இலட்சணங்கள் வழிந்தோட ஊர்வலத்தில் முன்னணியில் செல்லும் காட்சியை ரூபவாஹினியும் முதலாளித்துவப் பத்திரிகைகளும் தூக்கிப்பிடித்துக் காட்டியிருந்தன.

கடந்த வார அரசாங்கத் தரப்பு பாராளுமன்றக் குழு அறிக்கைகளின்படி சமசமாஜ கட்சி தலைவர்கள் பொதுஜன முன்னணியின் ஏனைய கட்சித் தலைவர்களுடன் சேர்ந்து மே தின ஊர்வலத் தடைக்கு "ஹாய்" போட்டுள்ளார்கள். இந்த விதத்தில் ஊர்வலத் தடையில் நேரடியாகச் சம்பந்தப்பட்ட சமசமாஜ தலைவர்கள் தமது ஊர்வலத்துக்கு அனுமதி பெற்றுக் கொண்டது எப்படி? இதனைப் பற்றி வீரக்கோன் மே தினக் கூட்டப் பேச்சில் பின்வருமாறு விளக்குகின்றார்: "எமக்கு ஊர்வலம் செல்ல அனுமதி வழங்கியதையிட்டு மாட்சிமைதங்கிய ஜனாதிபதி அம்மையாருக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணி செயலாளர் விவசாய அமைச்சர் மாட்சிமைதங்கிய டி.எம். ஜயரத்ன அவர்களுக்கும் நாம் நன்றி செலுத்துகின்றோம்." ஏனைய அமைப்புக்களின் ஊர்வலங்களை தடைசெய்து, அந்த அமைப்புக்களுக்கு கோலங்காட்டி, ஜனாதிபதியின் குதிக்கால்களை நக்கிப்பெற்ற உத்தரவு மூலம் சமசமாஜ தலைவர்கள் ஊர்வலம் சென்றுள்ளார்கள். சமசமாஜக் கட்சியினர் அன்று நடாத்தியது தடையை மீறிய ஊர்வலம் அல்ல கருங்காலி ஊர்வலமாகும்.

பொலிசாரின் பெரும் புள்ளிகளும் பொலிஸ்காரர்களும் சுற்றி வளைத்துச் செல்ல அவர்கள் தமது அங்கத்தவர்களுடன் தொடர்பு கொள்ள ஒலிபெருக்கியும் ஒலிவாங்கியும் வழங்கி பொலிசின் பாதுகாப்புடனும் வழிநடாத்தலுடனும் சமசமாஜ தலைவர்கள் கருங்காலி ஊர்வலத்தில் செல்வதைக் கண்ட சிந்திக்கும் ஆற்றல்படைத்த எந்த ஒரு தொழிலாளியும் இம்முடிவுக்கு வருவது நிச்சயம்.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தொழிலாளர் வர்க்கத்தின் ஜனநாயக உரிமைகளை நசுக்கித்தள்ளும் சமசமாஜக் கட்சியின் அலுகோசு நடவடிக்கைகளையும், ஏனைய ஊர்வலங்களைத் தடைசெய்து கருங்காலி ஊர்வலத்தில் ஈடுபடுவதையும் வன்மையாகக் கண்டனம் செய்கின்றது. சமசமாஜக் கட்சியின் கடைகெட்ட ஜனநாயக விரோத நடவடிக்கைகளை கண்டனம் செய்யும்படி நாம் சகல தொழிலாளர்களையும் ஒடுக்கப்படும் மக்களையும் வேண்டுகின்றோம்.

ஊர்வலங்களைத் தடைசெய்யும் உத்தரவு வெளியானதன் பின்னர் சமசமாஜ செயலாளர் பற்றி வீரக்கோன் அத்துவக்காத்து முறைமை வழிநடாத்தி, தடையைப் பற்றி பொலிசுக்கு முறைப்பாடு




கருங்காலி ஊர்வலத்தில் சமசமாஜ பொதுச் செயலாளர் பற்றி வீரக்கோன், பிரதி அமைச்சர் அத்தாவுத செனவிரத்ன, வாசுதேவ நாணயக்கார

செய்யும் அறிக்கை ஒன்று வெளியாகி இருந்தது. அரசாங்கத்தின் ஊர்வலத் தடைக்கு மூடு மந்திரமாக அங்கீகாரம் வழங்கிவிட்டு, பின்னர் தடை அறிவிக்கப்பட்டதுதான் தாமதம் தமது முகத்தைக் காப்பாற்றிக் கொள்ள சமசமாஜ தலைவர்கள் எடுக்கும் கடைகெட்ட வாய்ச் சிலம்பமடிப்புக்கள் புரிகிறதல்லவா? அவர்களின்படி தடையுத்தரவைப் பிறப்பித்தது ஜனாதிபதியோ அல்லது அரசாங்கமோ அல்லது தாமோ அல்ல. எல்லாமே பொலிசுதான்! தடையை விதித்த பொலிசார் சமசமாஜக் கட்சிக்கு மட்டும் தடையை அகற்ற கருணாசீலர்களாகிவிட்டனர்.

கருங்காலி ஊர்வலத்தின் பின்னர் சமசமாஜ தலைவர்கள் பொதுஜன முன்னணி கூட்டத்தின் மேடையில் ஜனாதிபதிக்கு சிரம் தாழ்த்தியவாறு உட்கார்ந்து கொண்டனர். இன்று என்றும் இல்லாத ஜனநாயகத்தை மக்கள் பயங்கரம் இல்லாமல் அனுபவித்துக் கொண்டுள்ளதாக சந்திரிகா குமாரதுங்க சமசமாஜ, ஸ்டாலினிச கட்சித் தலைவர்களின் முகத்தில் அறைந்ததுபோல் கூறினார். காரணம்? தம்மைப் போலவே இவர்களுக்கும் மானம் வெட்கம் துளியும் கிடையாது என்பதை அவர் அறிந்து கொண்டிருந்ததுதான்.

மே தினக் கூட்டத்தில் பேசிய சமசமாஜ தலைவரின் மற்றும் வாயடிப்புக்களுக்கு மத்தியில் இந்த அபூர்வமான அறிக்கையும் தலைநீட்டியது: "என்.எம்.சுடுபட்டது நடுரோட்டில்! கோவிந்தன் சுடுபட்டது நடுரோட்டில்! சோமபால சுடுபட்டது நடுரோட்டில்! எமக்கு இருப்பது நடுரோட்டு!" இந்தக் கட்சி இருப்பது ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு அல்ல. முதலாளிகளின் சார்பில் பெருந்தெருவில் பிச்சை எடுத்து தொழிலாளர்–ஒடுக்கப்படும் மக்களை நெறிப்படுத்துவதற்காகும். முதலாளிகளின் முகாமைச் சேர்ந்து கொண்டுள்ள இத்துரோகிகளைத் துரத்தி அடித்து தொழிலாளர் வர்க்கத்தின் புரட்சிக் கட்சியைக் கட்டியெழுப்பப் போராடுவது புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமேயாகும்

## தோட்டத் தொழிலாளர் வேலைநிறுத்தம்:

(8ம் பக்கம் தொடர்ச்சி)

### புருட்ஹில் தோட்டம்

ஏப்ரல் 23ல் அட்டன் புருட்ஹில் தோட்டத்தில் நடைபெற்ற மறியலிற்கும் கூட்டத்துக்கும் தொழிலாளர்களின் பேராதரவு கிட்டியது. கூட்டத்தில் பேசிய இலங்கை ஆசிரியர் சங்க அங்கத்தவரும் பு.க.க.மத்திய குழு உறுப்பினருமான பரீடா இம்ரான், தோட்டத் தொழிற் சங்கங்களின் துரோகத் தலைமைகள் சமசமாஜ, கம்யூனிச, இ.தொ.கா.தலைவர்களின் ஆதரவுடன் இலவசக் கல்விக்கும் சுகாதார சேவைக்கும் குழிபறிக்கும் விதத்தை விளக்கினார். ஏற்கனவே 236 கொழும்பு பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதாகவும் பெற்றோர் பாடசாலைகளைப் பாதுகாக்க நேரிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இப்பிரச்சினைகளுக்கான தீர்வு சோசலிச அரசாங்கம் மட்டுமே எனவும் இம்ரான் இறுதியாகக் குறிப்பிட்டார்.

### செம்பு தோட்டம்

அட்டன் செம்பு தோட்டத்தில் பிக்கட்டிங் நடைபெற்ற வேளையில் அங்கு வந்த யூ.என்.பி.தொழிற் சங்கத் தலைவர்கள் சிலர் அவசரகாலச் சட்டத்தின் போது ஊர்வலமோ அல்லது மறியலோ நடாத்த விதி கிடையாது எனக் கூறிக் கொண்டு ஓட்டமெடுத்தனர்.

### ஸ்டோனிக்கிளிவ்

ஏப்ரல் 24ம் திகதி கொட்டகலை ஸ்ரொனிகிளிவ் குறூப் லொக்கீஹில் தோட்டத்தில் பிரச்சாரத்துக்காக சென்ற பெ.தோ.கை.தொ.ச., பு.க.க.அங்கத்தவர்கள் பீ.சந்திரசேகரனின் மலையக மக்கள் முன்னணி கிளை உப-தலைவர் தங்கையா என்ற பேர்வழியால் தடுக்கப்பட்டனர். யாரிடம் கேட்டு மறியல் செய்கிறீர்கள்? வேறு எந்தவொரு சங்கமும் இந்த மாதிரி வேலை செய்யவில்லை. மறியல் செய்தால் பொலிசாரைத் தருவிப்பதாக தோட்ட சுப்பிரின்டன்ட் எனக்கு அறிவித்திருக்கின்றார். அவர் மிரட்டினார். நாம் கூட்டம் நடாத்துவது தொழிலாளர்களுக்கு அறிவித்து. அவர்கள் எதிர்த்தால் மட்டுமே நிறுத்துவது எனக் குறிப்பிட்ட புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அங்கத்தவர்களின் பிரச்சாரத்துக்கு தொழிலாளர் ஆதரவு இருந்ததைக் கண்ட தோட்ட சுப்பிரின்டனின் ஏஜந்து பின்வாங்கிச் சென்றார்.

### கொட்டகலை டிரேடன்

கொட்டகலை டிரேடன் தோட்டத்தின் பிரச்சாரத்தில் பத்து பெண் தொழிலாளிகள் உட்பட 20 தொழிலாளர்கள் கலந்து கொண்டனர். கூட்டதில் சுற்றாடலில் உள்ள 150 தொழிலாளர்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் அரவிந்தன், துமிந்த பீரிஸ், இம்ரான், சிலாபம் பு.க.க.அங்கத்தவர் அருணாசலம் ஆகியோர் பேசினர்.

### கிறிஸ்லர்ஸ் பாம்

ஏப்ரல் 25ம் திகதி கொட்டகலை கிறிஸ்லர்ஸ் பாம் தோட்டத்தில் பிரச்சாரம் இடம்பெற்ற வேளையில் அங்கு வந்த ஸ்டாலினிஸ செங்கொடிச் சங்க தலைவரான சுப்பிரமணியம் பிரச்சாரத்தை உடைத்து எறிய எடுத்த முயற்சி தொழிலாளர்களின் ஆதரவினால் பிசுபிசுத்துப் போய்விட்டது. இங்கு இடம் பெற்ற கூட்டத்துக்கு சுமார் 50 தொழிலாளர்கள் வருகை தந்தனர்.

### மஸ்கேலிய

வேலைநிறுத்தத்தின் இறுதி நாளான ஏப்ரல் 26ம் திகதி பு.க.க, பெ.கை.தொ.ச. அங்கத்தவர்கள் மஸ்கேலிய தோட்டத்தில் மறியல் நடாத்தினர்.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக
மாதம் இருமுறை இதழ்

தொழிலாளர் பாதை

சந்தாதாரர் ஆகுங்கள்

சந்தா (தபால் கட்டணம் உட்பட)

| | |
|---|---|
| இதழ் 8 | ரூ.40 |
| இதழ் 12 | ரூ.60 |
| இதழ் 24 | ரூ.120 |
| இதழ் 48 | ரூ.240 |

விபரங்களுக்கு:
தொழிலாளர் பாதை
முகாமையாளர்,
90, 1வது மாளிகாகந்த
ஒழுங்கை, மருதானை,
கொழும்பு-10
தொ.பே. 682220

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருங்கள்

பெயர் . . . . . . . . . . . . . . . . . . . . . . .

முகவரி . . . . . . . . . . . . . . . . . . . . . . .

கையொப்பம் . . . . . . . . . திகதி . . . . . . . .

இக் கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி
பொதுச் செயலாளர்,
புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்
90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை,
மருதானை, கொழும்பு-10
தொ.பே. 682220

படிப்பகம்